காந்தியடிகளும் ஆங்கிலமும்

ம. பொ. சிவஞானம்

இன்ப நிலையம்

மயிலாப்பூர் :: சென்னை-4.

முதற் பதிப்பு : 19—1—62.

உரிமை ஆசிரியருடையது.

விலை ரூபாய் ஒன்றரை

வ. உ. சி. பிரஸ், சென்னை-5.

பதிப்புரை

தலைவர் ம. பொ. சி. அவர்கள் தாம் தொட்டதி லெல்லாம் வெற்றி காணும் கைராசிக்காரர்.

எந்தக் கொள்கையைச் சொன்னாலும், அதைப் பற்றித் தீர ஆலோசித்து, அதற்கான காரண-காரி யங்களை விவாத ரீதியாகப் பேசவும், எழுதவும் கூடிய தன்னிகரற்ற ஆற்றலைப் பெற்றவர் திரு. ம. பொ. சி. அவர்கள்.

ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு இயக்க சம்பந்தமாக இப்போது தீவிரமாகப் பேசியும் எழுதியும் வருகிறார்கள். இந்தத் தொடரில் இதற்குமுன், 'தமிழா, ஆங்கிலமா?' —'பாரதியும் ஆங்கிலமும்' என்ற இரு நூல்களை எழுதி யுள்ளார்கள்.

அண்ணல் காந்தியடிகள் ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு பற்றித் தெரிவித்த கருத்துக்களைத் தொகுத்து, அதற்குத் தம் விரிவான விளக்கத்துடன் இந்நூலை திரு. ம. பொ. சி. அவர்கள் எழுதியுள்ளார்கள்.

ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு இயக்கத்திற்குப் பயன் படும் இதுபோன்ற நூல்களை வெளியிடும் நல்வாய்ப்பை அளித்த தலைவர் ம. பொ. சி. அவர்களுக்கு என் நன்றி.

சோம. சுவாமிநாதன்

19–1–62 *"இன்ப நிலையம்"*

ம. பொ. சி. எழுதிய நூல்கள்

இலக்கியம்	
வீரக் கண்ணகி	2-50
வள்ளுவர் வகுத்த வழி	0-50
இலக்கியச் செல்வம்	2-00
சிலப்பதிகாரமும் தமிழரும்	0-50
எங்கள் கவி பாரதி	0-50
கட்டுரை	
தமிழா, ஆங்கிலமா?	1-50
தமிழும் கலப்படமும்	1-00
பாரதியும், ஆங்கிலமும்	1-00
காந்தியடிகளும், ஆங்கிலமும்	1-00
கட்டுரைக் களஞ்சியம்	2-50
இன்பத் தமிழகம்	1-75
முரசு முழங்குகிறது!	1-25
வானொலியில் ம. பொ. சி.	1-50
இலக்கியத்தின் எதிரிகள்	0-50
ம. பொ. சி. கூறுகிறார்!	1-00
அரசியல்	
சுயாட்சியா, பிரிவினையா?	1-00
தமிழன் குரல்	1-25
பிரிவினை வரலாறு	0-50
தமிழரசா—திராவிடஸ்தானா?	0-50
வரலாறு	
சுதந்திர வீரன் கட்டபொம்மன்	1-50
வீரபாண்டியக் கட்டபொம்மன்	1-75
கப்பலோட்டிய தமிழன்	1-75
தமிழர் கண்ட காந்தி	0-50
சுதந்திரப் போரில் தமிழகம்	0-50
கயத்தாற்றில் கட்டபொம்மன்	0-50
தொகுப்பு நூல்	
தமிழகம் தந்த ம. பொ. சி.	2-00
ம. பொ. சி. வாழ்க்கை வரலாறு	1-00
தலைவர் ம. பொ. சி.	2-00

இன்ப நிலையம்

மயிலாப்பூர் : : சென்னை-4.

காந்தியடிகளும் தாய் மொழியும்

காபா காந்தி மகன் கரம் சந்திர மோகனதாஸ் காந்தி, தமது உழைப்பால், தியாகத்தால், உயர்குணங்களால், 'மகாத்மா காந்தி' என்று உலகோரால் அழைக்கப்படுகிறார். அவருடைய பிறப்பிடம், கூர்ஜர மாநிலம். அவருடைய தாய்மொழி, குஜராத்தி. ஆனால், பரந்த நோக்கம் காரணமாக, பாரதத்தில் வழங்கும் அத்தனை மொழிகளையும் அவர் நேசித்தார். அதே நேரத்தில், தம் தாய் மொழியான குஜராத்தி மொழியிடமும் ஆழ்ந்த பற்றுக் கொண்டிருந்தார். ஒவ்வொரு மொழியினரும் தம் தம் தாய் மொழியிடம் பற்றுக் கொள்ளவேண்டும், அதிலுள்ள இலக்கியங்களைப் பயிலவேண்டும் என்று தம் வாழ்நாள் முழுவதும் வற்புறுத்தி வந்தார்.

காந்தியடிகள், தமது சுயசரிதையைத் தம் தாய் மொழியான குஜராத்தியில்தான் எழுதினார். பின்னரே, அதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டார். குஜராத்தி மொழியின் வளர்ச்சிக்காக "குஜராத் வித்தியா பீடம்" என்ற பெயரில், தம் தாய்மொழிக்கென ஒரு பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்தார். அதில், ஆங்கிலம்

ஒரு பாட மொழியாக மட்டுமே பயிற்றுவிக்கப்படுகிறது. மற்றபடி, எல்லாப் பாடங்களும் குஜராத்தி மொழியிலேயே கற்பிக்கப்படுகின்றன.

குஜராத்தி ஒருவர் தம் இனத்தவரான மற்ருெரு குஜராத்திக்கு எழுதும் கடிதம், அவர்தம் தாய்மொழி யான குஜராத்தி மொழியிலேயே இருக்கவேண்டும் என்பது காந்தியடிகளின் கொள்கை. ஒவ்வொரு மொழி யினரும் இதையே பின்பற்றவேண்டு மென்றும் அவர் விரும்பினுர்.

ஜனுப். ஜின்னுவுக்கு உபதேசம்!

'முஸ்லிம் லீக்' என்ற அரசியல் கட்சியின் இணையற்ற தலைவராகத் திகழ்ந்த ஜனுப். ஜின்னு அவர்கள், பிறப்பால் ஒரு குஜராத்தி. காந்தியடிகளும் குஜராத்தி யாதலால், 17-7-44ல் ஜனுப் ஜின்னுவுக்கு அவர் எழுதிய கடிதத்தில்,

"சகோதரர் ஜின்னு! தாய் மொழியில் பேசு மாறு நான் தங்களைத் தூண்டிய காலம் ஒன்று உண்டு. இன்று அதே பாஷையில் தங்களுக்குத் தைரியமாக எழுதுகிறேன்.

"நான் சிறையில் இருந்தபோது என்னை வந்து பார்க்கும்படித் தங்களை அழைத்தேன். நான் விடுதலையானதி லிருந்து இதுவரையிலும் தங்களுக்கு எழுதவில்லை. ஆனுல், தங்களுக்கு எழுதும்படியாக இன்று என் உள்ளம் சொல்லு கிறது. தாங்கள் விரும்புகிற சமயத்தில் நாம் சந்திப்போம். இஸ்லாத்துக்கோ, இந்நாட்டின் முஸ்லிம்களுக்கோ, என்னை விரோதியாகக் கரு தாதீர்கள். நான் தங்களுக்கு மட்டுமின்றி, உலகம் முழுவதற்குமே நண்பன், ஊழியன். என்னை

ஏமாற்றி விடாதீர்கள். இந்தக் கடிதத்தின் உருது மொழி பெயர்ப்பை இத்துடன் அனுப்பி யிருக்கிறேன்."

—காந்தி தொகுப்பு நூல்; பக். 722.

என்று குறிப்பிட்டிருக்கிறுர். ஜனுப். ஜின்ஞு அவர்கள் ஆங்கில மொழியின்பால் அளவற்ற பற்றுடையவர் என்பது இங்கு நினைவில் கொள்ளத் தக்கதாகும்.

ஒவ்வொருவரும் தம் எண்ணத்தைத் தமது தாய் மொழியிலே எழுதியும் பேசியும் வெளியிடவேண்டும். அவசிய மேற்படும்போதுமட்டுமே ஆங்கிலத்தில் எழுதவும்பேசவும் முற்படவேண்டும் என்பது காந்தியடிகளின் உறுதியான லட்சியம். அடிகள் தாம் நடத்திய "அரிஜன்" என்ற ஆங்கிலப் பத்திரிகைக்கு, முதன்முதலில் ஆங்கிலத்தில் எழுதுவதையே வழக்கமாகக் கொண்டிருந்தார். இதிலுள்ள தவறை உணர்ந்த பிறகு, 7-7-40ல் அவர் எழுதிய கட்டுரையொன்றில், இனித் தாம் குஜராத்தி மொழியிலேயே எழுதப் போவதாகவும், அதன் அங்கீகாரம் பெற்ற மொழி பெயர்ப்புகள் ஆங்கிலத்திலும் இந்தியிலும் வெளியிடப்படும் என்றும் அறிவித்தார். இந்தப் பிரதிக்ஞையைத் தம் வாழ்நாள் முழுவதும் உறுதியாகக் கடைப்பிடித்து வந்தார்.

காந்தியடிகள் தென்னுப்பிரிக்காவி லிருந்து இந்தியா வந்தபோது, பம்பாய் நகரத்திலுள்ள குஜராத்தி மக்கள் அவரை மகத்தான முறையில் வரவேற்றனர். அப்போது பேச்சாளர் அனைவரும் ஆங்கில மொழியிலேயே பேசியதைக் கேட்டு அடிகளார் மனம் வருந்தினுர். இதுபற்றி, "சத்திய சோதனை" என்ற தமது நூலில் அவர் கீழ்வருமாறு குறிப்பிட்டிருக்கிறுர்:

> "விடையிறுக்கும் முறை எனக்கு வந்த போது நான் கூர்ஜர மொழியிலேயே நன்றி கூறினேன். கூர்ஜரத்தார் அடங்கிய கூட்டத்தில் ஆங்கிலம் பேசுவதை மறுத்துரைத்தேன்."

காந்தியடிகள் முற்றும் துறந்த முனிவரெனவே வாழ்ந்தவர். ஆம்; பற்றுக்களுக்கு அடிமைப்படாதவர். ஒன்றின்பால் கொண்ட பற்று, மற்ருென்றின்பால் பகையாக மாறுவதற்கு இடம் தராதவர். அப்படிப்பட்டவரும், தம் தாய்மொழியின்பால் பற்றுக்கொள்வதை மதமாகக்கொண்டிருந்தார் என்ருல், தாய் மொழிப் பற்றின் புனிதத் தன்மைக்கு வேறென்ன சான்று வேண்டும்! இளமையில் அடிகளிடம் தோன்றிய குஜராத்தி மொழிப்பற்று, இறுதி நாள்வரை அவருடைய இதயத்திலே நீங்காது நிலைத்திருந்தது.

ஆனால், காந்தியடிகளைப் பின்பற்றுவோர் எனப்படும் அரசியல்வாதிகளிலே சிலர், தாய் மொழியின்பால் பற்றுக் கொள்வோரை நிந்திக்கின்றனர். தாய்மொழிப் பற்றுக்கு "மொழி வெறி" என்ற இழிபெயர் கொடுத்து, அவர்களை ஏசுகின்றனர். காரணம், அவர்கள் காலமெல்லாம் ஆங்கில மொழிக்கு அடிமைப்பட்டிருப்பதுதான். அத்தகையவர்களும் தங்களைக் 'காந்திய வாதிகள்' என்று கூறிக் கொள்வது நகைப்புக்குரிய செயலாகும்.

தமிழ் பயில ஆர்வம்!

தமிழினத்தாரின் தாய் மொழியாகிய தமிழ், உலகின் மூத்த மொழிகளிலே ஒன்றுகும். இலக்கிய வளமுடைய மொழியாதலால், பிறமொழியாளரும் தமிழ் மொழியின் பால் அன்பு செலுத்தி, அதனைப் பயிலுவதிலே ஆர்வம் காட்டி வந்திருக்கின்றனர். அத்தகைய பெரியார்களிலே ஜி. யு. போப், வீரமாமுனி என மாற்றுப்பெயர் பூண்ட பெஸ்கி ஆகியோரை முக்கியமானவர்களாகச் சொல்லலாம்.

குறள் படித்த காந்தி!

இந்திய மொழிகளிலே தம் தாய் மொழிக்கு அடுத்த படியாக தமிழ் மொழியையே மிகுதியாக நேசித்தார் காந்தியடிகள். அம்மொழியைப் பயின்று திருக்குறள் போன்ற இலக்கியங்களைக் கற்பதிலும் ஆர்வம் காட்டினர். இது பற்றி அவரே கூறக் கேட்போம்:

"திருக்குறளைப் பற்றி சில மொழிகள் உங்கள் வரவேற்பில் மிளிர்கின்றன. இருபதாண்டுகளுக்கு முன்னரே யான் தமிழ் பயிலத் தொடங்

கியதற்குக் காரணம் திருக்குறள் மூலத்தையே நேராகப் படித்தல் வேண்டும் என்று என் உள் ளத்தெழுந்த அவாவே யாகும். தமிழ் மொழியில் புலமை பெறுதற்குரிய ஓய்வு எனக்கு ஆண்ட வன் அருளினுனில்லை. அது குறித்து யான் உறும் வருத்தத்திற்கோர் அளவில்லை."

—மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பக். 144.

இது, 12–10–27ல் காந்தியடிகள் தூத்துக்குடிக்கு வந்த காலை, தமக்கு அளித்த வரவேற்புக்குப் பதிலளித்த போது அவர் குறிப்பிட்டதாகும்.

நன்றியுணர்வு !

அடிகள் தென்னுப்பிரிக்காவில் சத்தியாக்கிரகப் போர் நடத்தியபோது அங்கு வாழும் தமிழ் மக்கள் அவருக்குத் துணை புரிந்தனர். அந்த நிகழ்ச்சி காரணமாகத் தமிழ் மொழியின்பாலும் தமிழினத்தின்பாலும் நன்றிக் கடன் பூண்டார் காந்தியடிகள்.

"......இப்போரில் தமிழ் மக்கள் புரிந்த துணைபோல வேறு எந்த இந்தியரும் புரியவில்லை. அவர்களுக்கு நன்றியறிதல் காட்ட அவர்கள் நூல்களைப் பயிலவேண்டும் என்று நினைத்தேன். அப்படியே, அவர்கள் மொழி பயில்வதில் மிக ஊக்கமாக ஒரு திங்கள் கழித்தேன். அம்மொழி யைப் பயிலப் பயில அதனழகை உணரலா னேன். அது மனம் கவரும் ஓர் இனிய மொழி. தமிழ் மக்களுள் பண்டை நாளிலும் இந்நாளிலுங் கூடப் பல அறிஞர் இருந்தனர்—இருக்கின்றனர் என்பது அம்மொழியின் அமைப்பாலும் பயிற்சி

யாலும் அறியக் கிடக்கின்றது. இந்தியாவில் ஓர் இனம் ஏற்படவேண்டுமானால், சென்னை மாகாணத்துக்கு அப்பால் உள்ளவரும் தமிழுணரல் வேண்டும்.”

—மனித...அடிகளும், பக். 142–43.

இந்தியாவில் உள்ள அகில இந்தியத் தலைவர்களுள் வேறு எவரும் தமிழ் மொழியை இவ்வளவு அன்போடு நேசித்து, அதன் அருமை பெருமைகளை வாய்விட்டுக் கூறியதில்லை. காந்தியடிகளின் தமிழ்ப் பற்றுக் கண்டு மனம் உருகினார் தமிழ்ப் பெரியார் திரு. வி. க.—அவர் கூறுகிறார்:

“அடிகளுக்கு மீண்டும் பிறப்புண்டேல் அவர் தமிழ் நாட்டில் பிறப்பார் என்னும் உறுதி எனக்கு உறுகிறது. ஆண்டவனே! காந்தியடிகளைத் தமிழ் நாட்டில் பிறக்குமாறு செய்வித்து, அவரைத் தமிழராக்கி, அவர் வாயிலாக எனது அருமைக் கன்னி மொழியை வளர்க்கத் திருவருள் செய்க......”

—மனித...அடிகளும், பக். 145.

இது, தமிழ்ப் பெரியார் இறையருள் வேண்டி நிகழ்த்திய பிரார்த்தனை. ஒரு தலைமுறைக்கு முன்பு தமிழ் மக்களிடையே தாய் மொழிப் பற்றுடையோரைக் காண்பது அரிதாக இருந்தது. இப்போதைவிட மோசமான நிலையில் ஆங்கில மொழி மோகம் படித்தவர்களிடையே காணப்பட்டது. அந்த நிலையில், தமிழினத்தவருக்கு தாய் மொழிப் பற்றைப் போதித்தார் காந்தியடிகள். ஏன்? ஆங்கில ஆதிக்க எதிர்ப்புணர்ச்சியைப் புகட்டினார் என்றாலும் பொருந்தும்.

இதுவா, சுதேசிப் பற்று?

அடிகள், 1915-ல் மாயூரத்திற்கு வருகை தந்தபோது, அவருக்கு மகத்தான முறையில் வரவேற்புத் தரப்பட்டது. வரவேற்பு இதழ் ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டு இருந்ததைக் கண்டு அடிகள் நொந்து கூறியதாவது:

> "வரவேற்பு ஆங்கில மொழியில் பொறிக்கப்பட்டிருத்தல் காண்கிறேன். இந்திய தேசிய காங்கிரஸில் சுதேசித் தீர்மானம் நிறைவேறி இருக்கிறது. நீங்கள் சுதேசிகள் என்று கருதிக்கொண்டு இவ்வறிக்கையை ஆங்கில மொழியில் அச்சிறுத்தினுல் நான் சுதேசியல்லன். ஆங்கில மொழிக்கு மாருக யான் ஒன்றும் சொல்வதற்கில்லே. நீங்கள் உங்கள் நாட்டு மொழிகளேக் கொன்று, அவைகளின் சமாதியின்மீது ஆங்கிலத்தை நிலவச் செய்வீர்களாயின், நீங்கள் நன்னெறியில் சுதேசியத்தை வளர்ப்பவர்களாக மாட்டீர்கள் என்று சொல்வேன். எனக்குத் தமிழ் மொழி தெரியாதென்று நீங்கள் உணர்ந்தால், அம்மொழியை எனக்குக் கற்பிக்கவும், அதைப் பயிலுமாறு என்னேக் கேட்கவும் வேண்டும். அவ்வினிய மொழியில் அறிக்கை அளித்து, அதை மொழி பெயர்த்து உணர்த்தியிருப்பீர்களாயின், உங்கள் கடனே ஒருவாறு ஆற்றினவர்களாவீர்கள்.
>
> —மனித...அடிகளும், பக். 126.

"காந்தியின் வாரிசு" என்று பட்டம் சூட்டிக்கொண்டு எத்தனேயோ பெருந்தலேவர்கள் நம் தாயகமான தமிழகத்துக்கு எத்தனேயோ முறை வந்து வந்து போகிருர்கள்.

அவர்களில் எவரும் "உங்கள் தாய் மொழியில் பற்றுக் கொள்ளுங்கள்" என்று நமக்குக் கூறுவதோ, நம்மவரிலே சிலர் ஆங்கில மொழியில் அவர்களுக்கு அளிக்கும் வரவேற்பைக் கண்டு வெறுப்பதோ இல்லை. மாறாக, தமிழ் மொழியில் அழுத்தமான பற்றுக் கொண்டுள்ளோரைக் குறைகூறிப் பேசிவிட்டுப் போகின்றனர். அவர்கள் நமக்கு உபதேசிப்ப தெல்லாம் "இந்தி மொழி பயிலுங்கள்" என்பதே. அதற்குமேல் ஆங்கில மொழியின் அவசியம் பற்றியும் அறிவுரை கூறுவார்கள். வாரிசுத் தன்மைக்கான பண்பு நிறைவுபெற அவகாசம் வேண்டும் போலும்!

பழித்தவர்களுக்குப் பதில்

1927-ம் ஆண்டில் காந்தியடிகள் திரும்பவும் தமிழகத்துக்கு வருகை தந்தார். அந்நாளில், தேசிய ஐக்கியத் திற்கெதிராகக் குரல் கொடுக்கும் கூட்டம் தமிழகத்தில் தோன்றிவிட்டது. அந்தக் கூட்டம் தமிழ் மொழியிடம் காந்தியடிகளுக்குள்ள அன்பையும் சந்தேகித்தது. அந்தப் போக்குக் கண்டு வருந்தி, 12-10-27-ல் தூத்துக்குடி நகரில் காந்தியடிகள் கூறியதாவது:

> "தமிழ் மொழிப் பயிற்சியைப் பற்றி நான் ஒன்றுங் கூறியதில்லையென்று சிலர் என்மீது பழி சுமத்துவதாகக் கேள்வியுற்றேன். அப்பழி என்னை அணுகாது. என்னை நன்கறிந்தவர் என் மீது அப்பழி சுமத்த ஒருப்படமாட்டார். ஆங்கிலம் பயில்வதற்கு முன்னர் தமிழ் மொழி பயிலல் வேண்டுமென்று யான் பன்முறை பகர்ந்திருக்கிறேன். 1915-ம் ஆண்டிலேயே ஆங்கிலத்தினும் தமிழ் மொழியைச் சிறப்பாகக் கொள்ளுமாறு தமிழ் மக்களை வேண்டிக்கொண்டேன். இன்

றைக்குப் பத்தாண்டுகளுக்கு முன்னர் இந்தியா முழுவதும் சுற்றிச் சுற்றி அந்நிய மொழி வாயிலாகப் பிள்ளைகளுக்குக் கல்வி புகட்டலாகாது என்று கிளர்ச்சி செய்தேன்; தாய் மொழியில் பேசுமாறும், தாய் மொழி நூல்களைப் பயிலுமாறும் மக்களுக்கு விண்ணப்பஞ் செய்துகொண்டேன்.

"அவரவர் அவரவர்க்குரிய தாய் மொழியிலேயே கல்வி பெறல்வேண்டும். தமிழ் மக்கள் தங்கள் தாய் மொழியாகிய தமிழைப் பயில வேண்டுவது அவர்களது இன்றியமையாத கடமை. தமிழர் தம் மொழியை ஆங்கிலம் முதலிய மொழிகளைவிட முதன்மையாகக் கருதல் வேண்டும். தமிழ் நாட்டில் ஓரிடத்தில் எனக்கு ஆங்கிலத்தில் வரவேற்பறிக்கை வழங்கப்பட்டது. அதை உடனே யான் மறுத்துரைத்ததை நீங்கள் அறிந்திருக்கலாம். எனது மனோநிலை உணராது அடாத பழி இனி என்மீது சுமத்த மாட்டீர்கள் என நம்புகிறேன்."

—மனித...அடிகளும்; 144–45.

மேலே தந்துள்ள அடிகளின் உரையால், 1915–ம் ஆண்டிலேயே தமிழ் மக்கள் மத்தியிலே ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு இயக்கத்தைக் காந்தியடிகள் துவக்கி வைத்துள்ளார் என்பதனை அறியலாம். அடிகளார் அன்று துவக்கி, பின்னர் தம் வாழ்நாள்வரை தொடர்ந்து நடந்திவந்த இயக்கத்தைத்தான் இப்பொழுது தமிழரசுக் கழகம் தீவிரமாக நடத்தி வருகிறது.

தமிழகத்தில் வாழும் மக்களுக்குத் தமிழ் ஒன்றே தாய் மொழி. அந்த மொழியினும் இனியது இந்த உலகத்தில் வேறெதுவும் இல்லை. தாய் மொழியைப் புறக்கணித்து உயர்தரக் கல்வியை ஆங்கில மொழியிலே பயில்வது ஈன்றெடுத்த தாய்க்குச் செய்யும் துரோகம் போன்றதாகும். அந்தத் துரோகத்தையே தொடர்ந்து செய்ய உரிமை கேட்பது மன்னிக்க முடியாத மாபெரும் குற்றமாகும்.

தமிழ் முனிவர் பெருமிதம்

தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாணசுந்தரனார், கடைந்தெடுத்த காந்தியவாதி. காங்கிரசிலிருந்து வெளியேறிய பின்னரும் வாழ்நாள் முழுவதும் காந்திய நெறியைக் கடைப்பிடித்தவர். அவர் தமிழ்பற்றிக் கூறுவதைக் கேட்போம்:

"ஆங்கிலம் பயின்ற தமிழ் மக்களில் பெரும்பான்மையோர் தமிழ்த் தாயை மாசுபடர்ந்த துச்சலிலிறுத்தி, அவளுக்கு உணவும் உடையும் அளியாது அவளை வருத்தி, அயல்மாதை வீட்டில் அமர்த்தி, அம்மாதுக்கு நல்லுணவும் உடையும் தந்து, மலர் சூட்டி அவளை வழிபடுதல் எவரும் அறிந்ததொன்று. இது நம் மக்களின் அறிவைப் புலப்படுத்துகிறதா? அறியாமையைப் புலப்படுத்துகிறதா?

"தமிழ் மக்களே! ஓருங்கள்; தமிழின் தொன்மை என்ன! தமிழ்ப் பாக்களின் வனப்பென்ன! மயிர் சிலிர்க்கிறது! மிகத் தொன்மை வாய்ந்த ஒருபெருந் தனி மொழி யன்றோ நந்தமிழ்? தமிழனாகப் பிறந்து தமிழ்ச் சுவையுணர்ந்த ஒருவன் வீடு பேற்றையும் காதலியான்.

அவனுக்கு வீடுபேறு தமிழ் மொழி இன்பமே யாகும். அவன் மீண்டும் மீண்டுந் தமிழ் நாட்டில் தமிழனுகப் பிறந்து தமிழ்ச் சுவை மாந்தி இன் புறவே விரும்புவான்.”

—மனித...அடிகளும்; பக். 141.

காலமெலாம் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கெனப் பணியாற்றி, தமிழினத்தின் வாழ்வுக்கெனத் தொண்டு புரிந்து அமரராகிவிட்ட நம் பெரியாரின் பொன்மொழி யைப் புறக்கணிப்போர், தம்மைத் ‘தமிழர்’ எனக் கூறிக் கொள்ளத் தகுதியுடையோரல்லர்.

தற்போது தமிழ் மக்களிடையே தாய் மொழிப் பற்று வளர்ந்து வருகிறதென்ருலும், தமிழகத்தில் ஆங்கிலத் திற்கு முதலிடம் தந்துள்ள கொடுமையையும், அதனுல் விளேயும் கேடுகளேயும் படித்த மக்கள் இன்னமும் சரியாக உணரவில்லே. வேதனே தரும் இந்த நிலே விரைவில் மாறினுலொழியத் தமிழினத்துக்கு விமோசனமில்லே.

பொது மொழிப் பிரச்சனை

இந்தி மொழி காந்தியடிகளின் தாய் மொழி அல்ல. அப்படியிருந்தும், இந்தி அல்லது இந்துஸ்தானிதான் இந்தியாவின் பொது மொழியாக இருக்க முடியுமென்று அவர் முப்பதாண்டுகளுக்கு முன்பே கூறினார். இந்திய மொழிகள் எல்லாவற்றிலும் இந்திதான் வளமான மொழி என்றோ, இலக்கண—இலக்கியத் துறைகளில் தலையாய மொழி என்றோ, காந்தியடிகள் அதனைப் பொது மொழியாக ஏற்றாரில்லை.

இந்தியைப் பொது மொழியாக அவர் ஏற்றதற்கான காரணங்கள் இரண்டு.

> ஒன்று, இந்தியாவில் பேசப்படும் மொழிகளிலே இந்தி மொழி பேசுகின்ற மக்களின் எண்ணிக்கையே அதிகமாக இருக்கின்றதென்பது.
>
> மற்றொன்று, இந்தி மொழியானது பயில்வதற்கு எளிதான மொழியாக இருக்கின்றதென்பது.

இந்த இரண்டு காரணங்களாலேயே இந்திதான் இந்தியாவின் பொது மொழியாக இருக்கவேண்டும் என்று அடிகளார் அபிப்பிராயப்பட்டார்.

திணிப்புக்கு எதிர்ப்பு

ஆனால், இந்தி மொழி பேசாத மக்கள்மீது அம்மொழியை அரசாங்க அதிகாரத்தைக் கொண்டு திணிப்பதை அடிகள் வெறுத்தார். இந்தி இந்தியாவின் பொது மொழியாக வருவது மக்களுடைய விருப்பத்தின் மீது நிகழவேண்டுமென்பதே அடிகளின் கருத்து. எந்தத் துறையிலுமே நிர்ப்பந்த முறையை அடிகள் ஆதரித்ததில்லை. குறிப்பாக, மொழித் துறையில் நிர்ப்பந்தம் துளியளவும் கூடாதென்பது அவர் கொள்கை.

இந்தியைப் பொது மொழியாக ஏற்பது வேறு; மத்திய அரசாங்க ஆட்சி மொழியாக ஏற்பது வேறு. இந்த இரண்டும் ஒன்றன்பின் ஒன்ருக நிகழவேண்டும் என்பது அடிகளின் விருப்பம்.

முதலில் இந்தியாவிலுள்ள மக்கள் எல்லோருமோ, அல்லது ஒரு கணிசமான எண்ணிக்கையினரோ இந்தி மொழியில் போதுமான பயிற்சி பெற்று விடுவார்களாயின், அப்புறம் மத்தியில் ஆட்சி மொழியாக வருவதற்கான வாய்ப்பும் இந்திக்கு ஏற்பட்டுவிடும். ஆகவே, முதலில் தேவைப்படுவது, மக்கள் எல்லோரும் இந்தி மொழியில் போதிய ஞானம் பெறுவதற்கான திட்டம்தான். ஆனால், மத்திய அரசினரோ, இந்தியை நடுவிடத்தின் ஆட்சி மொழியாகவும் மாநிலங்களுக்கிடையே தொடர்பு மொழியாகவும் செய்து விடுவதையே அவசரக் கடமையாகக் கருதுகின்றனர். இதனல், இந்தி மொழி பேசப்படாத பிரதேசங்களில் மக்களிடையே ஒருவிதமான அச்சம்

ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலே, "இந்தி ஒழிக" எனக் கூறும் தேசிய ஐக்கியத்தின் விரோதிகளுடைய கைகளேப் பலப்படுத்திவிடுகிறது. ஆம், இந்தியைப் பொது மொழியாக ஏற்கும் தேசியவாதிகளுக்கும், அம்மொழியை முழுமூச்சோடு எதிர்க்கும் பிரிவினைவாதிகளுக்குமிடையே உள்ள இடைவெளியைக் குறைத்து விடுகின்றது. என்ன காரணத்தினுலோ, மத்திய அரசினரும் இந்தி வெறியர்களும் இந்த உண்மையை இதுவரை உணரவில்லே. இந்தித் திணிப்பு முறை காந்தியடிகளின் கருத்துக்கு எதிரானதாகும்.

தமிழ் நாட்டைப் பொருத்த வரையில், "இந்தி எதிர்ப்பு" என்பது, தமிழுக்கும் எதிராக ஆங்கில மொழியின் ஆதிக்கத்தை ஆதரிப்பதாகவே இருக்கிறது. இந்தி எதிர்ப்பு வேறு, இந்தி திணிப்பு வேறு. இந்தியைப் பொது மொழியாகவே ஏற்க மறுப்பவர்கள், ஆங்கில மொழிக்கு அடிமைப்பட்டவர்களாக அல்லது இந்தியாவின் தேசிய ஒற்றுமையை எதிர்ப்பவர்களாக இருக்கக் காண்கிருேம். இந்தித் திணிப்பை எதிர்ப்பவர்கள் நிலே இதுவன்று. அவர்கள் இந்தியை இந்தியாவின் பொது மொழியாக ஏற்கின்றனர். இந்தியைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்கள் அம்மொழியைப் பயிலுவதற்கு முன்பு, இந்தியாவின் ஆட்சி மொழியாக இந்தியைத் திணிப்பதையே எதிர்க்கின்றனர். இந்தித் திணிப்பு எதிர்ப்பாளர் காந்தியடிகளின் கருத்தைப் பின்பற்றுவோர் ஆவர்.

கற்பதற்கு எளிதான மொழி எது?

"ஆங்கிலமே இந்தியாவின் பொது மொழியாகவும் மத்தியில் ஆட்சி மொழியாகவும் நிரந்தரமாக நீடிக்கவேண்டும்" என்கின்றனர் சிலர். காந்தியடிகளின் மனச்சாட்சிக்-

காவலர் எனப் பெயர் பெற்ற அறிஞர் ராஜாஜி, ஆங்கில ஆதிக்க ஆதரிப்பு இயக்கத்திற்குத் தலைமை தாங்குகிறார். தேசிய ஐக்கியத்தின் விரோதிகள் அவருடைய முதுகில் மறைந்துகொண்டு "என்றென்றும் ஆங்கிலம்" என்று குரல் கொடுக்கின்றனர்.

"ஆங்கிலத்தைப் பொது மொழியாக வைத்துக்கொண்டால் போகிறது என்று நம்மவர்களில் சிலர் சொன்னதுண்டு. இப்போதும் சிலர் அப்படி சொல்லக்கூடும். ஏதோ சில ஆயிரம் பேர்தான் நம்மவர்களில் ஆங்கிலம் படித்திருக்கிறார்கள். அவர்களைப் பொருத்தவரையில் ஆங்கில மொழியே பொது மொழியாக இருந்தால் போதுமானதாகும். ஆனால்... இந்தியாவில் கோடிக் கணக்கான மக்கள் பல மாகாணங்களில் வசித்து வருகிறார்கள். அவர்கள் ஒருவருக் கொருவர் தொடர்பு வைத்துக்கொள்ளவேண்டும் என்று நான் விரும்புகிறேன். இன்னும் பல தலைமுறைகள் நாம் படித்தாலுமே எல்லோருக்கும் பொது மொழியாக ஆங்கிலத்தை ஆக்கிக்கொள்ளலாம் என்பது முடியாத காரியம்.

"தவிர, ஆங்கிலம் படிப்பதில் எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கின்றன. ஆனால், இந்தி—இந்துஸ்தானி படிப்பதில் அவ்வளவு சிரமம் இல்லை. ஆங்கிலம் படிப்பதற்கு நீண்ட காலம் ஆவதுபோல இந்தி படிப்பதற்கு ஆகாது.

"இந்தியைக் கற்றுக்கொள்வதற்கு, ஒரு நாளைக்கு நான்கு மணி வீதம் ஒரு மாதம் செலவு செய்தால் போதும். இதற்கு வேண்டிய உற்சாகமும் ஊக்கமும் உங்களிடம் இல்லாமலா போய்

விட்டது? நமது நாட்டிலிருக்கும் இருபது கோடி மக்களோடு தொடர்பு வைத்துக் கொள்வதற்காக கொஞ்ச நேரம் ஒரு மொழியைக் கற்பது வீணென்று கருதுகிறீர்கள்? இருக்கட்டும். உங்களில் ஆங்கிலம் தெரியாதிருக்கும் சிலர், ஆங்கிலம் கற்க எண்ணியதாக வைத்துக்கொள்வோம். நாள் ஒன்றுக்கு நான்கு மணி நேரம் செலவிட்டு ஒரு மாதத்திலேயே ஆங்கிலத்தைப் படித்து விடலாம் என்ற நம்பிக்கை இங்கிருப்பவர்களில் யாருக்காவது உண்டா? இருக்க முடியாது.''

—''மாணவருக்கு'', பக். 34–36.

இது, 27–6–36ல் பெங்களூரில் நடந்த கர்னாடக இந்திப் பட்டமளிப்பு விழாவில் காந்தியடிகள் தெரிவித்த கருத்தாகும்.

ஆங்கிலம் பொதுமொழியாக முடியாது

நடு நிலைமையோடு பொதுமொழிப் பிரச்சனையை ஆராய்ந்து பார்க்கும் எவரும் இந்தியாவின் பொது மொழியாக இருக்கும் தகுதி ஆங்கில மொழிக்கு இல்லையென்பதை ஒப்புக்கொள்வர். உயர்தரக் கல்வி கற்றோரே ஆங்கில மொழியில் உரையாடவும் கடிதம் எழுதவும் ஆற்றல் பெற்றிருப்பர். அவர்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவு. எந்தக் காலத்திலும்—கல்வி கற்றோரின் எண்ணிகை எவ்வளவுதான் அதிகரித்தாலும், ஆங்கிலத்தில் பேசவும் எழுதவும் ஆற்றல் பெற்றோரின் எண்ணிக்கை மிக மிகக் குறைவாகவே இருக்கும். சுருங்கச் சொன்னால், சமுதாயத்தின் மேல்தளத்தில் உள்ள மக்களே ஆங்கிலம் கற்றோராக இருப்பர். அடித்தளத்தில் உள்ள சாதாரண மக்கள் ஆங்கிலத்தில் பேசவும் எழுதவும் ஆற்றல்

பெறுவது என்றைக்குமே சாத்தியமில்லை. அது அவசியமானதுமல்ல. "தேசிய ஒற்றுமை" என்பதன் பொருள் என்ன? காஷ்மீரிலுள்ள உழவரும், கன்னியா குமரியிலுள்ள உழவரும் சந்தித்து உரையாடி உறவு கொள்வதற்கு வாய்ப்பிருக்கும்போதுதான் தேசிய ஒற்றுமை ஏற்படும். அந்தச் சாதாரண உழவர்கள் எளிதில் பயில்வதற்கான மொழி இந்தியேயன்றி, ஆங்கிலம் அல்ல. ஆங்கிலம் படித்தவர்களிடையே மட்டும் ஏற்பட்ட உறவு உடைக்க முடியாத உறுதி கொண்ட "தேசிய ஒற்றுமை" யாக இல்லையென்பதைக் கடந்த காலத்தில் கண்டுவிட்டோம். சாதி–மதக் கிளர்ச்சிகளுக்கும் பிரிவினை இயக்கங்களுக்கும் தலைமை தாங்கியோர்–தாங்குவோர் அனைவரும் ஆங்கிலம் பயின்று பட்டம் பெற்றவர்களே. ஆகவே, ஆங்கிலத்தைப் பொது மொழியாக ஏற்று தேசிய ஒற்றுமையைச் சாதித்துவிடலாம் என்று கூறுவது, தோல்விப் பாதையிலேயே தொடர்ந்து செல்வதற்கு அழைப்பு விடுவதுபோல் ஆகும். அதனால், பாரதம் இன்னுமின்னும் பிளவுபடும்.

இந்தியாவிலுள்ள பல்வேறு மொழிகள் பேசும் வெவ்வேறு இனங்களிடையே ஒற்றுமையை உருவாக்க ஒரு பொது மொழி தேவையென்றால், அம்மொழி அந்தப் பதினைந்து மொழிகளிலே ஏதேனும் ஒன்றாகத்தான் இருக்க முடியும்—இருக்கவும் வேண்டும். இதுதான் நீதி, —உலக நியதி. இதுவரை நாம் கூறி வந்தது, பொது மொழிப் பிரச்சனை பற்றித்தான்; மத்திய அரசாங்க ஆட்சி மொழி பற்றி அல்ல. காந்தியடிகள் தம் காலமெல்லாம் வற்புறுத்தி வந்ததும் இந்தியைப் பொது மொழியாக மக்கள் ஏற்கவேண்டும் என்பதுதான். மத்திய அரசின் ஆட்சி மொழி இந்திதான் என்று அடிகள் சொன்னாலும்,

அதனை, அவசர–அவசியப் பிரச்சனையாக அவர் கருத வில்லை. நமது கருத்தும் அதுதான்.

இந்தி எதிர்ப்பாளர் நிலை

இந்தியானது மக்களிடையே உறவை வளர்ப்பதற்கான பொதுமொழியாவதற்கு முன்பே அதனை மத்தியில் ஆட்சி மொழியாக்க இந்தி மொழியாளர் அவசரப்படுகின்றனர் என்றால், அதனைத் தங்கள் பலம் முழுவதையும் கொண்டு எதிர்ப்பது தமிழர் கடமையாகும். ஆனால், அந்தத் தவறைக் காரணம் காட்டி, அன்னிய மொழியான ஆங்கில மொழியின் ஆதிக்கம் நிரந்தரமாக நீடிக்கவேண்டுமென்று கிளர்ச்சி செய்வது மாபெருந் தவறாகும். இந்தியை எந்த விதத்திலும் ஏற்க மறுப்பவர்கள், தமிழகத்தில் ஆட்சி மொழியாகவும் பயிற்சி மொழியாகவும் ஆங்கிலமே நீடிப் பதை ஆதரிப்பவர்களாக இருக்கின்றனர். இப்படி நாம் கூறுவது தவறென்றால், இனி வரவிருக்கும் இந்தி ஆதிக் கத்தை வெறிகொண்டு எதிர்க்கும் இவர்கள், ஏற் கெனவே இருந்துவரும் ஆங்கில ஆதிக்கத்தை எதிர்க்கா தது ஏன்?

சுருங்கச் சொன்னால், தாய் மொழியான தமிழுக்காக அல்லாமல், ஆங்கில மொழியின்–அம்மொழி பயின்றவர் களின் ஆதிக்கத்தை நிலைநாட்டவே, ஆங்கிலம் பயிலாத மக்களை அடிமைகளாக நடத்தவே சிலர் இந்தியை எதிர்க் கின்றனர். சாதாரணப் பொது மக்கள் இந்த உண்மையை உணரும் நாள் அதிக தூரத்திலில்லை.

பொது லிபிப் பிரச்சனை

இந்தியாவிலுள்ள எல்லா மொழிகளுக்கும் ஒரு பொது லிபி தேவையென்று கூறப்படுகின்றது. இதில், ஆங்கிலம் பயின்ற மேதைகளும் இந்தி பக்தர்களும் ஒன்று பட்ட கருத்துடையவராக இருக்கின்றனர். ஆனால், அந்தப் பொது லிபியைத் தேர்ந்தெடுப்பதில் அவர்களிடையே கருத்தொற்றுமையில்லை. ஆங்கிலப் பித்தர்கள், ''ரோமன் லிபி'' என்கின்றனர். இந்தி பக்தர்கள், 'நாகரி லிபி' என்கின்றனர்.

இந்திய மாநிலங்களின் முதலமைச்சர்களெல்லாம் புதுடில்லியில் மாநாடு கூடி, நாகரி லிபியை இந்தியாவின் பொது லிபியாகத் தேர்ந்தெடுத்தனர். தமிழகத்து முதல் அமைச்சரும் கொள்கையளவில் அதற்கு ஆதரவு கொடுத்தார். ஆனால் தமிழகத்தில் தமிழரசுக்கழகம் உள்ளிட்ட காங்கிரசல்லாத அரசியல் அமைப்புகள் அனைத்தும் ஒருமுகமாக எதிர்த்தன. 'போர் முரசு'ம் கொட்டின. அதன் விளைவாக, பொது லிபிக் கோஷ்டிகளின் குரல் மாறியது. ''பிரதேச மொழிகளுக்குரிய லிபிகளை அழிக்காமலே ரோமன் லிபியைப் பொது லிபியாக ஏற்கலாம்'' என்றார் தமிழக நிதி

யமைச்சர் சி. சுப்பிரமணியம். ''நாகரி லிபியை ஏற்பதனால், தமிழ் லிபியைக் கைவிடத் தேவையில்லை. இரண்டு லிபிகளையும் கையாளலாம்'' என்றார் பிரதமர் நேரு. இது உண்மை என்றால், நாகரிக்கு 'பொது லிபி' என்று பெயர் வைப்பானேன்? 'பயிற்சி லிபி' என்று சொல்லலாமே! அதனை நடைமுறைக்குக் கொண்டுவரும் பொறுப்பை அரசினர் ஏற்காமல், சாகித்திய அகாடமியிடம் விடலாமே!

பிறமொழி கற்கும் கருவியே!

இந்த லிபிப் பிரச்சனையில் காந்தியடிகள் கருத்தென்ன ? இதோ, அவரே கூறக் கேட்போம்:

''நான் தென்னாப்பிரிக்காவில் இருந்த காலத்திலேயே சமஸ்கிருதத்திலிருந்து வந்த மொழிகள் யாவற்றையும் தேவநாகரி லிபியைக் கொண்டே எழுதுவது நல்லதென்ற முடிவிற்கு வந்தேன். திராவிட மொழிகளையுங்கூட, தேவநாகரி லிபியின் மூலமாகவே எளிதாகக் கற்றுக் கொண்டு விடலாம் என்பது என் நம்பிக்கை. தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலியவற்றை அந்தந்த மொழிக்குரிய லிபியைக் கொண்டே நான் சில காலம் படித்து வந்தேன். லிபிகள் நான்கையும் தனித்தனியே கற்பது எனக்கு மிகவும் சிரமத்தைத் தந்தது. நான்கு மொழிகளுக்கும் லிபி ஒன்றாயிருந்திருக்குமானால், எவ்வளவோ குறுகிய காலத்திற்குள் அவற்றை நான் படித்திருக்க முடியும். இந்த மொழிகளைப் படிக்க என்னைப்போல் ஆவலோடிருக்கிறவர்களுக்கு, லிபியினால் ஏற்படுகிற கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. தென்னிந்தியாவில் இப்போது

நான்கு மொழிகள் இருக்கின்றன. இவை நான்கிற்கும் தேவநாகரி லிபியைக் கையாண்டால், ஒரு மொழி தெரிந்தவர்கள் மற்ற மூன்று மொழிகளையும் அந்த லிபியைக் கொண்டே, மிக எளிதாகக் கற்றுக்கொள்ளலாம். இந்தியைத் தேசிய மொழியாக வைத்துக்கொள்ள வேண்டுமென்ற விஷயத்தையும், எல்லா மொழிகளுக்கும் லிபி பொதுவாக இருக்க வேண்டுமென்ற விஷயத்தையும் சேர்த்துக் குழப்பவேண்டாம். இந்திய மொழிகள் யாவற்றையும் கற்க ஆசைப் படுகிறவர்களுக்கு ஏற்படும் கஷ்டத்தை விளக்கிக் காட்டுவதற்காக இதை இங்கே குறிப்பிட்டேனேயன்றி வேறில்லை.''

—'அரிசன்' 27-6-36.

பெங்களூரில் நடந்த கர்னாடக இந்திப் பட்டமளிப்பு விழாவில் காந்தியடிகள் மேற்கண்டவாறு பேசினார். பொது லிபிப் பிரச்சனையை அடிகளார் அணுகும் முறை வேறு. மத்திய அரசாங்கம் அணுகும் முறை வேறு. "இந்திய மொழிகள் யாவற்றையும் கற்க ஆசைப்படுகிறவர்களுக்காக'' என்று காரணங் காட்டி, காந்தியடிகள் பொது லிபியின் தேவையை நமக்கு உணர்த்துகிறார். பொது லிபி தேவை யென்பதை ஒப்புக்கொண்டால், அது நாகரி லிபியாக இருப்பதை ஏற்பதில் உண்மைத் தேசிய வாதிகளில் எவருக்கும் கருத்து வேற்றுமை யிருக்க முடியாது.

ஆனால், மத்திய அரசாங்கமோ "மொழி வெறியை அழிக்க''வும், "இந்திய தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கவும்'' என்று சொல்லிக்கொண்டு, நாகரி லிபியைத் தமிழர் மீது திணிக்க முயல்கிறது.

லிபிப் பிரச்சனையில் காந்தியடிகளின் கருத்து வழி நடக்கவில்லை மேலிடத்துக் காங்கிரஸ் தலைவர்கள். காந்தியடிகள், பொது மொழியாகிய இந்தியை நாகரி—உருது ஆகிய இரண்டு லிபிகளிலும் எழுதலாமென்றும், 'இந்தி'—'இந்துஸ்தானி' ஆகிய இரண்டு பெயர்களாலும் பொது மொழியை அழைக்கலாமென்றும் கூறினுர். பாகிஸ்தான் பிரிந்துபோன பின்னரும் இந்தக் கருத்தை வலியுறுத்தி வந்தார். ஆனுல், காங்கிரஸ் மேலிடம், "நாகரி லிபியில் எழுதப்படும் இந்திதான் இந்தியாவின் பொது மொழி" என்று அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே பொறித்து விட்டது. இது, இந்தி வெறியா? தேசிய ஒருமைப்பாட்டு நெறியா? காந்தியடிகள் கருத்துப்படி நாகரி—உருது லிபிகளை மத்திய அரசாங்கம் ஏற்றிருந்தால், இந்தியாவிலுள்ள சுமார் 5 கோடி முஸ்லிம்களின் நல்லெண்ணத்தைப் பெற்றிருக்கலாம், தவறிவிட்டது.

இரு லிபிகளில், எது?

இந்தி பக்தர்கள் நிலை இதுவாக இருக்க, ஆங்கில பக்தர்களோ, "ஆங்கில மொழியை இந்தியாவின் பொது மொழியாக–தேசிய மொழியாக ஏற்க வேண்டும். மத்தியில் என்றென்றும் ஆங்கிலமே ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்" என்று கூறுவதோடன்றி, "ஆங்கில மொழிக்குரிய ரோமன் லிபியையும் இந்தியாவின் பொது லிபியாகச் செய்ய வேண்டும்" என்கின்றனர். ஆங்கில ஆதிக்க எதிர்ப்பைக் கொள்கையளவில் ஆதரிப்பவர்களிலேயும் சிலர், பொது லிபிப் பிரச்சனையில் ரோமன் லிபியை ஏற்கின்றனர். இவர்களிலே, காந்தியவாதிகளாக விளம்பரம் பெற்றோரும் உண்டு.

பொது லிபிப் பிரச்சனையில் நாகரி லிபிபற்றிக் காந்தியடிகளின் கருத்தை மேலே எடுத்துக் காட்டி

னோம். இனி, ரோமன் லிபி பற்றி அடிகளின் கருத்தை அறிவோம்.

"உலகமெங்கும் ரோமன் லிபியை உபயோகிக்க வேண்டும் என்று கூறுகிறவர்கள் இருக்கிறார்கள். ஆனால், அப்படி ரோமன் லிபியை ஏற்றுக்கொள்ளும்படி ஏற்பட்டுவிட்டால், அது, மனித சாதிக்கே ஏற்படும் மகத்தான அநீதிகளில் ஒன்றாகும் என்று எனக்குத் தோன்றுகின்றது. ரோமன் லிபி மோகத்தைத் தடுக்க வேண்டும். மாநில அரசுகள் ரோமன் லிபியின் மோகவலையில் விழுந்துவிடலாகாது."

—'அரிஜன்' 11-8-46.

"ரோமன் லிபியை ஏற்பது பெரும் பிழை. அப்படிச் செய்வது கொதிக்கும் சட்டியிலிருந்து எரியும் நெருப்பில் விழுவது போன்றதாகும் என்று நான் எண்ணுகிறேன்."

—'அரிஜன்' 23-3-47.

இழிந்த போக்கு எதற்கு ?

ரோமன் லிபியை விரும்புவோரின் சுயமரியாதையற்ற போக்கை வெறுத்து அடிகள், கூறியதாவது:

"இந்திய தேசம் நாகரிகத்தின் மையொற்றுத் தாள் (தானாக சிந்தித்துப் பார்க்காமல், பிறர் நடப்பதுபோல் நடக்கக் கற்றுக்கொள்வது) என்று எல்லோரும் இழிவாக நினைக்கும்படி நம்மவர் நடந்து கொள்ளலாகாது."

—'அரிஜன்' 26-7-47.

காந்தியடிகளின் கருத்துப்படி, ரோமன் லிபியை இந்தியாவின் பொது லிபியாக ஏற்பது பற்றி நினைப்பதுகூடப் பிழையாகும். நாகரி லிபி இந்தியாவின் பொது லிபியாவதை அடிகள் ஏற்றாலும், மாகாண மொழிகளின் லிபிகளுக்கு மாற்று லிபியாகச் செய்வது பற்றி அவர் சிந்தித்ததுகூட இல்லை. 'இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்காக' என்றோ, பிரதேச-மொழி வெறிகளைப் போக்கும் மருந்தாக இருக்கும் என்றோ, அடிகள் நாகரியைப் பொது லிபியாக்க விரும்பவில்லை. "படித்தவர்களிலே சிலர் இந்தியாவிலுள்ள பல மொழிகளையும் கற்பதற்கு, நாகரியைப் பொது லிபியாகப் பயன்படுத்தலாம்" என்றே அவர் கருதினார். அடிகள் இன்று வாழ்ந்திருந்தால், படித்தவர்களிலே சிலருக்கு மட்டுமான இந்தப் பொது லிபிப் பிரச்சனையில் செயல்படும் பொறுப்பை இந்திப் பிரசார சபையிடமே விட்டிருப்பார். மத்திய—மாநில அரசாங்கங்கள் அதிகார தோரணையில் செயல்பட முன்வந்திருப்பதை முழுமூச்சுடன் எதிர்த்திருப்பார். இதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

ஆங்கிலம் தேவையென்ருல், எந்த நிலையில்? எந்த அளவில்?

காந்தியடிகள், தாய் மொழியில் பற்றுக்கொள்ளும்படி மக்களைத் தூண்டியதும், இந்தியைப் பொது மொழியாக ஏற்கும்படி வேண்டியதும் ஆங்கில மொழியின் ஆதிக்கத்தை அறவே ஒழிப்பதற்கேயாம். ஆங்கில மொழியின் ஆதிக்கம் நீடிப்பது இந்தியாவின் தேசியச் சுயமரியாதைக்கே இழுக்காகும்.

எதிர்ப்பது ஆதிக்கத்தையே!

அடிகளார் ஆங்கில மொழியை வெறுக்கவில்லை. அதன் ஆதிக்கத்தையே வெறுத்தார். தமிழரசுக் கழகத்தின் கொள்கையும் அதுவே.

ஆங்கிலம் பயின்று பட்டம் பெருதோர் அம்மொழியின் ஆதிக்கத்தை எதிர்த்தால், "இவர்கள் ஆங்கிலம் பயிலாமையால், மற்றவர்களும் பயிலக்கூடாது என்று கிளர்ச்சி நடத்துகிருர்கள்" என்று பழி கூறுகின்றனர் ஆங்கில பக்தர்கள். உலக மொழி என்ற அளவில் தமிழர் ஆங்கிலம்

பயில்வதை யாரும் எதிர்க்கவில்லை. எதிர்ப்பதாகச் சொல்வது அறியாமை; அல்லது அறிந்தே சொல்லும் பொய். ஆனால், தமிழுக்குரிய இடங்களை யெல்லாம் ஆங்கில மொழி ஆக்கிரமித்திருப்பதையும், அந்த ஆதிக்க நிலை நீடித்துவருவதையும் தாய் மொழிப் பற்றுளர் எதிர்க்கின்றனர். காந்தியடிகளின் நிலையும் இதுவே.

பாரிஸ்டர் பேசுகிறார்!

அடிகளார் இங்கிலாந்திலேயே தங்கி ஆங்கில மொழி பயின்று பாரிஸ்டர் பட்டம் பெற்றவர். அவருடைய எதிர்ப்புக்கு ஆங்கில பக்தர்கள் எந்த உள்நோக்கமும் கற்பிக்க முடியாது. ஆங்கிலத்தின் தேவையைக் காந்தியடிகள் புறக்கணிக்கவில்லை. இதோ, அவரே கூறுகின்றார்:

> "வியாபாரத் துறையிலே எல்லாத் தேசங்களுக்கும் பொதுவான மொழியாக ஆங்கிலம் இருந்து வருகிறது; அரசியல்துறைக்கும் அதுவே ஏற்றது. மேலும், ஆங்கில மொழியில் இலக்கிய வளமும் உண்டு. ஆங்கிலம் படிப்பதன் மூலமாக மேல் நாட்டாரின் சிந்தனைகளையும் பண்பாட்டையும் தெரிந்துகொள்ளலாம். ஆகவே, நம்மில் சிலருக்கு ஆங்கிலம் தெரிந்திருப்பது அவசியம் தான்.
>
> "நாட்டுக்குரிய வர்த்தகம், சர்வதேச அரசியல் ஆகிய துறைகளுக்குரிய காரியங்களை நடத்த ஆங்கிலம் உதவலாம். இது மட்டுமல்ல; மேல் நாட்டாரின் இலக்கியம், விஞ்ஞானம், சிந்தனைகள் ஆகியவற்றில் காணப்படும் சிறந்த அம்சங்களை ஆங்கிலத்தின் மூலமாக நாம் அறிந்து

கொள்ளலாம். இப்படி ஆங்கிலத்தை உபயோகிப்பதுதான் நியாயமான முறையாகும்.''

—'மாணவருக்கு', பக். 41.

''என்னுடைய வீட்டில் யாரும் நுழையாதபடி சுற்றிச் சுவறெழுப்ப வேண்டுமென்ருே, சன்னல்களில் காற்றுப் புகாதபடி சாமான்களை வைத்து அடைத்துவிட வேண்டுமென்ருே நான் விரும்பவில்லை. உலகத்திலுள்ள பலவேறு கலைகளும் நாகரீகமும் யாதொரு தடங்கலுமின்றி, என்னைச் சுற்றி வழங்கிவர வேண்டுமென்றே நான் விரும்புகிறேன்.''

—'மாணவருக்கு', பக். 43.

''ஆங்கில மொழிமீது எனக்கு வெறுப்பில்லை. அறிவாளிகளில் சிலருக்கு ஆங்கிலம் தெரிந்திருக்கவேண்டியது அவசியமாகும். எல்லா நாடுகளோடும் தொடர்பு வைத்துக்கொள்ளவும், மேல்நாட்டு விஞ்ஞான ஆராய்ச்சிகளைத் தெரிந்து கொள்ளவும் ஆங்கிலப் பயிற்சி இன்றியமையாததுதான்.''

அளவுக்கு மிஞ்சிய ஆதிக்கம்

மேலே தந்துள்ள சான்றுகள் காந்தியடிகள் ஆங்கில மொழியின் பகைவரல்ல என்பதனை வலியுறுத்தும். இனி, ஆங்கிலத்தை தாம் எதிர்ப்பதற்கான காரணங்களையும் அடிகளே கூறுகின்ருர்:

''அளவிற்கு மிஞ்சி ஆங்கிலத்திற்குப் பிரதானம் கொடுக்கச் சிலர் முயல்வதைக் கண்டு தான் எனக்கு மிகவும் வருத்தம் உண்டாகிறது.

இம்முயற்சி தோல்வியுறும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. அது அதற்குத் தகுந்த இடத்தில்தான் அது அது சோபிக்க முடியும்.''

—'மாணவருக்கு', பக். 38.

''ஆங்கிலச் சொற்களின் இன்னிசையை நமது காதுகளில் கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும்; நாவோ, ஆங்கிலத்தையே உச்சரிக்க வேண்டும்; அப்போதுதான் நமக்கு விடுதலையுணர்ச்சி ஏற்படும் என்று பலர் நம்புகிறார்கள். இது வெறும் மயக்கம்.''

—'மாணவருக்கு', பக். 40.

''கல்வி என்றால் ஆங்கிலம் படிப்பதுதான் என்று எண்ணுகிற அளவுக்குப் பரவி, சமூகத்தின் உடலையே அரித்துவிட்டது. இவை யாவும், நமது அடிமைத் தனத்தையும் இழிந்த நிலையையுமே எடுத்துக் காட்டுகின்றது என்பது வெளிப்படை. ஆங்கிலம் நமது தாய் மொழிகளைப்படுத்தி வைத்திருக்கிற பாட்டையும், அவற்றை வளரவொட்டாமல் நசுக்கிவைத்திருக்கிற நிலைமையையும் பார்க்கும்போது என் உள்ளம் பதைக்கின்றது.''

மோகத்தைக் கொன்று விடு !

காந்தியடிகள் தெரிவித்துள்ள மேற்சொன்ன கருத்துக்களிலிருந்து ஆங்கிலத்தின் தேவைகளையோ, அந்த மொழியின் மூலம் நாம் அடையும் நன்மைகளையோ அடிகள் புறக்கணிக்கவில்லை என்பது புலனாகும். ஆனால், ஆங்கிலத்திற்கு அடிமைப்படுவதை அவர் முழு மூச்சோடு எதிர்த்தார். மேலும் அவர் கூறுகின்றார்:

"நமது தாய்மொழி நம் இதயத்தில் வகித்து வந்த உன்னதமான இடத்தை ஆங்கிலம் கவர்ந்து கொண்டு, தாய் மொழியை வெளியே துரத்திவிட்டது. ஆங்கிலேயரும் நாமும் சமநிலையில் பழகாமையால், ஆங்கில மொழிக்கு இயல்பாக இருக்கவேண்டிய நிலையைவிட மேலான நிலையை அதற்கு நாம் கொடுத்துவிட்டோம்.

"சுயராஜ்யம் அடைவதற்குள்ள முக்கியமான அம்சங்களில் ஆங்கில மோகத்தைப் போக்குவதும் ஒன்ருகும்."

"எனக்குச் சொந்தமான கலையுணர்ச்சியையும் பண்பாட்டையும் மற்ருென்று வந்து அழித்துவிடுவதை நான் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. கள்ளன்போலவும், பிச்சைக்காரன் போலவும், அடிமை போலவும் இன்னொருவர் வீட்டிலிருந்து வாழ நான் ஒருக்காலும் சம்மதியேன்."

—'மாணவருக்கு', பக். 43.

ஆரம்ப வகுப்பிலுமா ஆங்கிலம் ?

காந்தியடிகள் தெரிவித்துள்ள இந்தக் கருத்துக்களிலிருந்து தற்போது ஆங்கில மொழிக்கு ஏற்பட்டுள்ள ஆதிக்கத்தையே அவர் எதிர்த்தார் என்பது தெளிவாகப் புலனுகும். ஆங்கில மொழி பயில்வதை ஒரு வகையில் காந்தியடிகள் ஏற்ருலும், அதற்குரிய இடத்தை நிர்ணயிப்பதில் தற்போதுள்ள நடைமுறையோடு அவர் வேறுபடுகிருர். தமிழகத்தில் தற்போது ஆரம்பப் பள்ளிகளில் மூன்ரும் வகுப்பிலிருந்தே ஆங்கிலத்தைக் கற்பிக்கவும் திட்டமிடப்படுகிறதாம். அதற்குக் கீழுள்ள வகுப்புகளில் ஆங்கிலம் பயிற்றுவிக்க அரசினர் திட்டமிடாததன் காரணம், அது தவறு என்ற நீதியுணர்ச்சியல்ல; சாத்திய

மில்லையென்பதே. முதல் வகுப்பிலிருந்தே ஆங்கிலம் பயிற்றுவிக்கவும் கான்வென்ட் பள்ளிகள் இருக்கின்றன அல்லவா! ஆரம்பப் பள்ளி தொடங்கி ஆங்கிலம் போதிக்கப்படுவதை காந்தியடிகள் விரும்பவில்லை—வெறுத்தார்.

> "எல்லோருமே ஆங்கிலத்தைப் படிக்க வேண்டிய அவசியம் என்னவோ, எனக்குத் தெரியவில்லை. அப்படியே படிப்பதாக வைத்துக் கொண்டாலும், சம்பாத்தியம் செய்ய ஆங்கிலம் உதவும் என்ற நிச்சயமாவது உண்டா? ஆங்கிலம் படிப்பதால் சம்பாத்தியம் செய்ய முடியுமென்று சிலர் எண்ணுகிறார்கள். அப்படியே சம்பாதிக்க முடியும் என்று வைத்துக்கொண்டாலும், ஆங்கிலத்தை எல்லோரும் படித்துவிட்டால் அதற்குள்ள மதிப்புக் குறைந்துவிடாதா?"
>
> —'மாணவருக்கு', பக். 34–5.

கல்லூரிக்குக் கீழ் இடமில்லை

ஆங்கில மொழி இந்திய மக்களுக்குத் தேவைப்படுவதை காந்தியடிகள் ஒப்புக்கொண்டாலும், எல்லோருக்குமே அம்மொழியைக் கட்டாயமாகக் கற்பிக்கும் தற்போதைய பாடத் திட்டத்தை அவர் ஏற்கவில்லை. படித்தவர்களிலே சிலர் மட்டுமே ஆங்கிலம் பயின்றவர்களாக இருந்தால் போதுமென்று அவர் கருதினார். அவர்களும், உயர் தரக் கல்வி பயிலும் கல்லூரி மட்டத்தில் ஆங்கிலம் கற்க வேண்டும் என்பதே அடிகளின் கொள்கை.

> "ஆங்கில மொழி இன்று உலக மொழி என்பதில் ஐயமில்லை. அதனால், அதற்குப் பாட திட்டத்தில் இரண்டாவது இடத்தைக் கொடுத்து விருப்பப் பாடமாகச் செய்வேன். அப்படிச்

செய்வதும், சர்வகலாசாலைப் படிப்புத் திட்டத்தில்தான். அதற்குக் குறைந்த பாடத் திட்டத்தில் அன்று. ஆங்கிலக் கல்வி வேண்டியது குறிப்பிட்ட ஒரு சிலருக்குத்தான்; கோடிக் கணக்கான மக்களுக்கன்று. இன்று நம்மால் ஆரம்பக் கல்வியைக்கூட இலவசமாகவும், கட்டாயமாகவும் கொடுக்க முடியாமல் இருக்கிறதே! அப்படியிருக்க, எல்லோருக்கும் ஆங்கிலம் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்வது எப்படி?''

—'அரிஜன்' 11-8-46.

காந்தியடிகள் தெரிவித்துள்ள மேற்சொன்ன கருத்தோடு, அவருக்குப் புகழ்பாடும் காங்கிரஸ் அரசினர் அமுல் நடத்தும் பாடத் திட்டத்தை ஒப்பிட்டுப்பார்த்தால், இன்றைய காங்கிரஸ் ஆட்சி காந்தியப் பாதையிலிருந்து விலகி வெகு தூரம் சென்று விட்டது என்பதையும், பழைய ஏகாதிபத்திய பாணிக் கல்வி திட்டத்தை வெகு உற்சாகத்தோடு அமுல் நடத்திக்கொண்டிருப்பதையும் அறியமுடியும். சுதந்திரம் வாங்கித் தந்த தேசப்பிதாவின் கல்விக் கொள்கைக்கு காங்கிரஸ் ஆட்சி தரும் மதிப்பு இதுவா? காந்தியடிகளின் ஆன்மாகூட அமைதி பெறுதே!

ஆங்கிலம் வாழ்க்கை மொழியாவதா ?

ஆங்கில மோகம் பிடித்த பெற்ருேர்கள் தாங்கள கெட்டதோடன்றி, தங்கள் மக்களையும்—இந்தியாவின் எதிர்காலக் குடிகளையும் கெடுத்து வருகின்றனர். இந்த அநீதி கடந்த நூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேலாக, வழைமயடிவாழையாக நடந்து வருகிறது. இந்தக் கொடுமை கண்டு காந்தியடிகளின் உள்ளம் குமுறியது.

> "குழந்தைப் பருவத்திலேயே ஆங்கிலத்தில் கருத்துக்களை நினைக்குமாறும் வெளியிடுமாறும் பிள்ளைகளைப் பழக்கும் இந்தியப் பெற்ருேர், குழந்தைகளையும் நாட்டையும் வஞ்சிக்கிருர்கள் என்பது என் உட்கிடக்கை. அவர்கள் குழந்தைகளை நாட்டு வழக்க ஒழுக்கங்களிலிருந்து விலக்கி, நாட்டுச் சேவைக்கே அருகதையற்றவராகச் செய்கின்றனர். ஆதலால், யான் குழந்தைகளிடம் தாய் மொழியிலேயே பேசுவதென்று உறுதி கொண்டுள்ளேன்."

—மனித...அடிகளும், பக். 131.

உலகில் அந்நியருக்கு அடிமைப்பட்டு வாழும் நாடுகளில் தவிர, சுதந்திரமாக வாழும் எந்த ஒரு நாட்டிலும் வீட்டுமொழியைப் புறக்கணித்து, இன்னொரு நாட்டின் மொழியிலே பேசவும் எழுதவும் குழந்தைகளுக்குப் பயிற்சியளிக்கும் கொடுமை நிகழவில்லை. துரதிருஷ்டம் பிடித்த இந்த பாரத நாட்டில்தான் அந்தக் கொடுமை வீடு தோறும் புகுந்து வாழ்கிறது. ஆரம்பக் கல்வியைக்கூட குழந்தைகளுக்குத் தாய் மொழியில் தர மறுக்கின்றனர், சில பெற்றோர்கள். ''அம்மா'' என்ற அமுத மொழியிலே குழந்தைகள் தங்களை அழைப்பதினும், ''மம்மி'' என்ற ஆங்கிலபாணியிலே அழைப்பதைக் கேட்டு மகிழும் தாயரும் இருக்கின்றனர். தமிழினத்துக்கு நேர்ந்த விபத்து என்னே !

ஆங்கிலம், அறிவு மொழியா ?

ஆங்கிலம் அறிவு மொழியாகப் பயிலப்படுவதை யாரும் எதிர்க்கவில்லை. ஆனால், அறிவு மொழியாகத் தானா ஆங்கிலம் பயிலப்படுகிறது? காலைமுதல் மாலை வரை நாட்டிலுள்ள வீதிதோறும், வீடுதோறும் ஒலிக்கும் வாழ்க்கை மொழியாக அல்லவா ஆங்கிலம் வாழ்ந்துவருகிறது! இப்படியும், சுயமரியாதையற்று அந்நியமொழிக்கு அடிமைப்பட்ட ஒரு இனம் அல்லது ஒரு சமுதாயம் உலகில் உண்டா? இந்தக் கொடுமைக்கு இரையான மக்கள் தங்களைப் ''படித்தவர்கள்'' — ''அறிவாளிகள்'' என்று சொல்லிக்கொள்ள, பிறர் சொல்லக் கேட்க வெட்கப்பட வேண்டாமா?

அறிவு வளர்ச்சிக்காக ஆங்கிலம் படிக்கிறோம் என்ற எண்ணமே மாணவ-மாணவியரிடையே ஏற்படுவதில்லை. மாறாக, ஆங்கிலம் படித்தால் நல்ல கணவன் வருவான்

என்று மாணவி எண்ணுகிருள். அப்படியே, ஆங்கிலம் படித்துப் பட்டம் பெற்ருல், பணக்காரன் வீட்டில் பெண் எடுக்கலாம், வரதட்சணைப் பணம் மிகுதியாகப் பெறலாம், பெரிய உத்தியோகம் அடையலாம்—என்று மாணவன் எண்ணுகிருன். இந்தச் சுயநல உணர்ச்சிதான் தாய் மொழிக்குத் துரோகம் செய்யத் தூண்டுகிறது. ஆங்கிலேயருடன் கைகுலுக்கிப் பழகவேண்டும், அவரோடு கைகோத்துக் கிளப்புகளிலே நடனமாட வேண்டும் என்பதற்காக, பாரதநாட்டு ஆண்களும் பெண்களும் ஆங்கிலம் பயின்ற காலமும் ஒன்றுண்டு. அந்தோ! ஆங்கில மோகத்தால் நம் தாய் நாடு அடைந்த இழிநிலை என்னே! இந்த இழிநிலைக்கு இரையான குழுவினர்தான் நாட்டிலே எல்லாத்துறைகளிலும் ஆதிக்கம் செலுத்துகின்றனர்! இதனை இனியும் அனுமதிக்கலாமா? ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு இயக்கம், ஆங்கில மொழிக்கு அடிமைப்பட்டோரைப் பகைப்பதன்று! அவர்கள் போக்கை மாற்றுவதற்கு முயல்வதாகும்.

> "அரசியலில் ஏதோ மதிப்பிருக்கிறது என்பதற்காகவும், வியாபாரத்துறைக்கு உதவியாக இருப்பதை உத்தேசித்தும், ஆங்கிலத்தைப் படித்து வருகிருர்கள். ஆங்கிலப் படிப்பின்றி உத்தியோகம் கிடைக்காதென்று நமது இளைஞர்கள் எண்ணுகிருர்கள். இப்போதுள்ள நிலைமையில் இது உண்மைதான்.
>
> "ஆங்கிலம் படிக்க வைத்தால் கலியாணம் செய்து கொடுப்பது எளிது என்று எண்ணிப் பெற்ருேர் பெண் குழந்தைகளை ஆங்கிலம் படிக்க வைக்கிருர்கள். ஆங்கிலேயரோடு பேசுவதற்கென்றே ஆங்கிலம் படிக்க விரும்பிய பெண்

களும் உண்டு. மனைவியர் தங்களோடும் தங்கள் நண்பர்களோடும் ஆங்கிலத்தில் பேச முடிய வில்லையே என்பதற்காக வருந்திய கணவன் மாரும் உண்டு. இவர்களை நான் நேரில் அறி வேன். ஆங்கிலத்தைத் தாய்மொழி யாக்கிவிட எண்ணி அநேக குடும்பத்தினர் ஆங்கிலத் தையே பேசிவருவதைப் பார்த்திருக்கிறேன்.''

—'மாணவருக்கு', பக். 42.

அடிகளாரின் கருத்து ஆங்கிலம் படித்த கூட்டத் தாரின் இழிந்த மனப்போக்கைப் படம் பிடித்துக் காட்டுவ தாகும்.

போப், பெஸ்கி தமிழ் பயின்றதெப்படி ?

அறிவு வளர்ச்சிக்கு ஆங்கிலக் கல்வி அவசியமென்றால் அதனை மறுப்பாரிலர். ஆனால், வீட்டு மொழியாகவும் ஆக்கிக் கொள்ளுகிறார்களே, அது அவசியம்தானா ? இந்த அளவுக்கு ஆங்கிலம் படித்தோரின் அறிவு கெட்டுவிடக் காரணம், அம்மொழியை ஆரம்பப் பள்ளியிலிருந்தே போதித்து வருவதுதான். பிள்ளைப் பருவத்திலேயே அன் னியமொழிக்கு அடிமைப்பட்டால்,பெரியவர்களான பிறகும் அந்தத் தீமையிலிருந்து விடுதலை பெறுவது கடினம். அதனாற்றான், சர்வகலாசாலை மட்டத்திற்குக் கீழே ஆங்கில மொழி பயிற்றுவிக்கக்கூடாதென்கிறார் மகாத்மா. வடக்கி லுள்ளோர் இப்போது தமிழ் மொழியைப் பயில்கிறார் கள் என்றால், ஆரம்பப் பள்ளிகளிலோ உயர்நிலைப்பள்ளி களிலோ அல்ல—பல்கலைக் கழகங்களில்தான். ஜி. யு. போப்—பெஸ்கி போன்ற ஐரோப்பியர்கள் தமிழ் மொழியைப் பயின்றார்கள் என்றால், தங்கள் நாட்டில் உயர்தரக் கல்வியை முடித்துக்கொண்ட பிறகுதான். அது

போல இந்தியர்கள் ஆங்கிலம் பயிலவேண்டுமென்பதே காந்தியடிகளின் கருத்து.

> "பிள்ளைகளுக்குப் பெற்றோர் எழுதும் போதும் மனைவியருக்குக் கணவன் எழுதும் போதும் தாய் மொழியில் எழுதாமல் ஆங்கிலத்தில் எழுதுவதைச் சிறிதுகூட என்னால் சகிக்க முடியவில்லை."

—'மாணவருக்கு', பக். 42-3.

பல ஆண்டுகளுக்கு முன்பு காந்தியடிகள் இதயத்தைத் துன்புறுத்திய இந்த இழிநிலை இன்றளவும் நீடித்து வருகிறது. ஆங்கிலத்தை வாழ்க்கை மொழியாகச் செய்து கொண்டுவிட்ட "மேதைகளே" தங்கள் தாய்மொழிக்கும் எதிராக "என்றென்றும் ஆங்கிலம்" என்று கூச்சலிடுகின்றனர். இதற்கு எதிராகத் தோன்றியதே, ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு இயக்கம்.

ஆம், ஆங்கிலம் தமிழ் மக்களின் வாழ்க்கை மொழியாக நீடிக்க இனி ஒரு கணம்கூட அனுமதிக்க முடியாது.

ஆங்கிலக் கல்வியின் கேடு

கல்வித் துறையில் 'பாடமொழி' என்பதன் பொருள் வேறு; 'பயிற்சி மொழி' என்பதன் பொருள் வேறு. கல்வி முழுவதையும் ஆங்கிலத்தின் மூலமே கற்பிப்பதைத்தான் காந்தியடிகள் வெறுத்தார். அதாவது, பள்ளிக்கூடங்களில் ஆங்கிலம் ஒரு பாடமாக இருப்பதை அவர் எதிர்க்க வில்லை. விஞ்ஞானம், வரலாறு, கணிதம், பூகோளம், சமூக இயல் ஆகிய பாடங்கள் ஆங்கில மொழியில் கற்பிக் கப்படுவதையே "ஆங்கிலக் கல்வி முறை" என்று அடி கள் குறிப்பிட்டார். அந்தக் கல்வித் திட்டத்தை மாற்றி, ஆங்கிலத்தை வெறும் பாடமொழியாகவும், பிரதேச மொழிகளைப் பயிற்சி மொழிகளாகவும் செய்யவே காந்தி யடிகள் விரும்பினர். "தமிழில் விஞ்ஞானக் கலைகளைப் பயிற்றுவிக்க முடியாது" என்று சிலர் கூறிவருகிறுர்களல் லவா? அவர்களுக்கு அடிகள் பதிலளிக்கிறுர்:

"குறித்த ஒரு மொழியால் விஞ்ஞான சம் பந்தமான கருத்துக்களையும் வேறு பல நுணுக்க மான விஷயங்களையும் எடுத்துச் சொல்லமுடியா தென்றும், அந்த மொழியில் வளர்ச்சிக்கு இட

மில்லை யென்றும் சிலர் சொல்லி வருகிறார்கள். இதைவிடப் பெரிய மூட நம்பிக்கை வேறு கிடை யாது. பேசுகிறவர்களுடைய நடை, உடை, பாவனைகளையும் வளர்ச்சியையும் அப்படியே பிரதிபலிக்கக் காண்பதே மொழியாகும்.

"உயர்ந்த கருத்துக்களை வெளியிடுவதற்கு வேண்டிய சொற்கள் நமது தாய் மொழியில் இல்லையென்று யாரேனும் எண்ணுவார்களானால், நாம் உயிரோடு இருப்பதைவிட இறந்து ஒழி வதே மேல் என்று எனக்குப் படுகிறது."

—'மாணவருக்கு', பக் 49–50.

இதைவிடத் தெளிவாகவும் கடுமையாகவும் வேறு எவரும் பதிலளித்துவிடமுடியாது. பதிலளிக்கவும் தேவை யில்லை. தம் தாய் மொழியை இழித்தும் பழித்தும் பேசு வோர், பூமிக்குப் பாரமாக வாழ்பவரே ஆவர். "தமிழைப் பழித்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்' என்ற உணர்ச்சி தமிழர் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் ஏற் படும்போதுதான் தாய் மொழியைப் பழிப்போருடைய மனம் மாறும். அந்த நிலையைத் தோற்றுவிக்கவே ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு இயக்கம் துவக்கப்பட்டிருக்கிறது.

முன்னேறியது ஆங்கிலத்தாலா ?

ஆங்கிலக் கல்வி முறையால்தான் பாரதம் முன்னேற்ற மடைந்ததாகக் கூறுகின்றனர் சிலர். இன்னும் அமெரிக் காவைப் போலவும் சோவியத் ருஷ்யாவைப் போலவும் பாரதம் தீவிர முன்னேற்றமடைய ஆங்கிலக் கல்வி முறை நீடிக்கவேண்டு மென்பதும் அவர்களுடைய வாதம். அவர் களுக்கு காந்தியடிகள் பதிலளிக்கிறார்:

"ஆங்கிலக் கல்வி காரணமாக நமது ஆண்மையை இழந்துவிட்டோம்; நமது அறிவு குன்றி விட்டது. இக்கல்வி முறை காரணமாக நாம் பேடிகளாகிவிட்டோம். சுதந்திரம் என்ற தென்றலிலே நாம் உலவ விரும்புகிறோம்; ஆனால் ஆங்கிலக் கல்விமுறை அடிமைத் தனத்தைத்தான் உண்டாக்கிவிட்டது. இதனால் நமது சமுதாயம் ஆண்மையை இழந்துகொண்டு வருகிறது. ஆங்கில ஆட்சி ஏற்படுமுன் நாம் அடிமைகளாக இருந்ததில்லை. முகலாயராட்சியின் கீழும் நமக்கு ஒரு வகையிலே சுதந்திரம் இருந்தது. அக்பர் காலத்தில் பிரதாபசிம்மன் போன்ற வீரர் தோன்றவில்லையா? ஒளரங்கசீப் காலத்தில் சிவாஜியைப் போன்ற தேசத் தொண்டர் வளர்ந்தோங்கவில்லையா? ஆனால் நமது நாட்டில் ஆங்கிலேயராட்சி ஏற்பட்டுள்ள இந்த நூற்றைம்பது வருட காலத்திலே சிவாஜியோ, பிரதாபசிம்மனோ நம்மிடம் தோன்றியதுண்டா?"

"நமது நாட்டில் அநேக மகாராஜாக்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் தம் சமஸ்தானத்து பிரிட்டிஷ் அதிகாரிக்குமுன் முழங்காலிட்டு வணங்குகிறார்கள்; தாங்கள் அடிமைகளே என்பதை ஏற்றுக்கொள்கிறார்கள்."

—'மாணவருக்கு', பக். 26–7.

"ஆங்கிலக் கல்வி முறை ஒரு பைசாசக் கல்வி முறையாகும். அதை அழிப்பதற்காக இன்று என் வாழ்க்கையை அர்ப்பணம் செய்திருக்கிறேன்."

—'மாணவருக்கு', பக். 28.

"ஆங்கிலக் கல்வி போதிக்கும் முறை காரண மாக ஆங்கிலம் படித்த இந்தியர் அனைவரும் ஆண்மை யற்றவர்களாகப் போய்விட்டார்கள்; மாணவர்கள் படித்துப் படித்துச் சோர்வடைந்து போனார்கள்; சுயமாக எதுவும் செய்யத் தெரியா மல் மற்றவர்களைப் பார்த்துச் செய்கின்ற வழக் கமே நமக்குள் அதிகமாகிவிட்டது. இதுவே ஆங்கிலக் கல்வியின் பயனைப் பற்றி நான் கொண்டுள்ள கருத்து."

வடிகட்டிய கேடு!

ஆங்கில மோகத்துக்கும் தாய் மொழிப் பற்றுக்கும் இடையே ஊசலாடுவோர் சிலர் இருக்கின்றனர். அவர்கள் தமிழுக்குச் சில சலுகைகள் வழங்கி, கல்வியின் மேல் கட்டத்தில் ஆங்கில மொழியின் ஆதிக்கம் நீடிப்பதையே உள்ளூர விரும்புகின்றனர். அன்னார் "ஆங்கிலக் கல்வியால் சிலகேடுகள் நேர்ந்தாற்போல பல நன்மைகளும் விளைந்துள் ளன" என்பர். அவர்கள் கூற்றை மறுத்துப் பேசுகிறார் மகாத்மா:

"ஆங்கிலக் கல்வி கெடுதலை மட்டுமன்றி நன் மையையும் செய்திருக்கிறது என்று அநேகர் சொல்லி வருகிறார்கள். இந்த எண்ணமுடைய வர்கள் எங்கும் இருக்கிறார்கள். ஆங்கிலப் படிப் பினால் நன்மை அடைந்துள்ளோம் என்று வேண் டும் என்றே கண்மூடித்தனமாக எண்ணிக் கொண்டிருக்கிறோம். ஆங்கிலேயரும் அப்படித் தான் எண்ணுகிறார்கள்."

"வடிகட்டிய கேடாய் ஆங்கிலப் படிப்பு முறை இருந்து வருகிறது. இந்தக் கல்வி முறையை

ஒழிப்பதற்காக என்னல் இயன்றமட்டும் முயன்று வருகிறேன். இந்தக் கல்வி முறையால் இது வரையில் எந்த நன்மையையும் நாம் அடைந்த தில்லே. நமக்கு ஏற்பட்டுள்ள நன்மைகள், இந்த ஆங்கிலக் கல்வி முறையையும் மீறி ஏற் பட்டனவேயன்றி, இந்தக் கல்வி முறை காரண மாக ஏற்பட்டவை அல்ல. ஆங்கிலேயர் இந் நாட்டுக்கு வராமல் இருந்தாலும் மற்ற நாடு களுக்குச் சமமாக நம் நாடும் முன்னேற்றம் அடைந்திருக்கும். முகலாயராட்சியின் கீழ் இருந் தாலும் கூட நம்மவர்கள் ஆங்கில மொழியையும் அதன் இலக்கியத்தையும் பயின்றிருப்பார்கள் என்பது திண்ணம். இப்போதுள்ள கல்விமுறை நம்மை அடிமைப்படுத்தி யிருக்கிறது. இதனுல் ஆங்கில இலக்கியத்தைச் சரியானபடி நம்மால் அறிந்து அனுபவிக்க முடியவில்லே.''

—'மாணவருக்கு', பக். 24–5.

வீரம் அழிந்தது!

காந்தியடிகள் கூறுவதுபோல ஆங்கிலக் கல்வியால் விளேந்த வடிகட்டின கேடுகளில் தலேயாயது, வீரர் மர புக்கே முற்றுப்புள்ளி வைத்ததாகும். தமிழகத்தில் ஆங்கி லக் கல்வி முறை நடைமுறைக்கு வந்த பிறகு வீரம் விடை பெற்றுக் கொண்டுவிட்டது! படித்த பரம்பரை கோழைத் தனத்தின் கொடுமுடியாகக் காட்சியளிக்கிறது. கேவலம் மாதச் சம்பளம் பெறும் ஒரு உத்தியோகத்திற்காக, தாய் இனத்தை, தாய் நாட்டைக் காட்டிக் கொடுப்போரின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது. அதனுல்தான் வீரபாண்டியக் கட்டபொம்மன் துவக்கி வைத்த விடுதலேப்

போர் வெற்றிபெற நூற்றைம்பது ஆண்டுக் காலம் பிடித்தது. கட்டபொம்மன் பரம்பரை மறைந்து, 'தொண்டைமான்கள்' பரம்பரை பெருகலானது.

சிலர், "சீர்திருத்தப் புரட்சி விளைவித்த ராம்மோகனரும், விடுதலைப் போரில் தளபதியாகத் திகழ்ந்த லோகமான்ய திலகரும், பிரிட்டிஷ் பேரரசைக் கதிகலங்க வைத்த காந்தியடிகளும் ஆங்கிலக் கல்வி முறை தந்த வீரர்கள் அல்லவா?" என்று கேட்கின்றனர், இப்படிக் கேட்பவர்களுக்கு அடிகளார் அளித்த பதில் வருமாறு:

"என்னை ஒரு பொருளாகக் கொள்ளவேண்டாம்; நான் ஒன்றுக்கும் உதவாத துரும்பு. என்னை விட்டு விடுங்கள். திலகரையும், ராம்மோகனரையும் பற்றி இப்போது கவனிப்போம். ராம்மோகனரும் திலகரும் ஆங்கிலம் படியாது இருந்திருப்பார்களாயின்—ஆங்கிலப் படிப்பு என்ற தொத்து நோய் அவர்களைப் பற்றாதிருந்தால்—இன்னும் எவ்வளவோ பெரிய மகான்களாக அவர்கள் விளங்கியிருப்பார்கள்.

"மக்களுக்குப் பொதுவாக சைதன்யர், சங்கரர், குரு நானக் போன்றவர்களிடத்திலே என்ன ஈடுபாடு இருந்ததோ அந்த ஈடுபாடு ராம்மோஹனரிடத்திலும் திலகரிடத்திலும் இல்லையென்றே சொல்லவேண்டும். இந்தப் பெரியார்களுக்கும் திலகர்–ராம்மோஹன் ஆகியோருக்கும் இடையிலுள்ள வேற்றுமை மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேற்றுமைதான். சங்கரர் ஒருவர் மட்டும் சாதித்துள்ள காரியத்தை ஆங்கிலம் படித்தோரனைவரும் ஒன்று கூடினாலும் செய்ய முடியாது.

"குரு கோவிந்தர் என்னும் பெரியார் ஆங்கிலம் படித்துத்தானு பெரியார் ஆனுர்?

"குரு நானக் என்னும் பெரியார் தீரத்திலும் தியாகத்திலும் சிறந்ததொரு சமூகத்தைச் சிருஷ்டித்திருக்கிருர். அதை ஒத்ததொரு சமூகத்தைக் காண்பதரிது. ஆங்கிலம் படித்த எந்த இந்தியனுலும் இத்தகைய சமூகத்தை சிருஷ்டித்துவிடமுடியுமா? தாம் கொண்ட கொள்கைக்காக உயிரையே தியாகம் செய்த துலீப் சிங்கைப் போன்ற ஒரு வீரனையாவது ராம்மோகனர் தோற்றுவித்திருக்கிருரா?

"திலகரிடத்திலும் ராம்மோஹனரிடத்திலும் எனக்கு மிக மதிப்புண்டு. ஆங்கிலக் கல்வி பெருதிருந்து, இயல்பாக உள்ள பயிற்சியை மட்டும் பெற்றிருந்தார்களானுல் திலகரும் ராம்மோஹனரும் சைதன்யரைப்போல அருஞ்செயல்களைச் செய்திருப்பார்கள். அந்த லட்சிய புருஷர்களைப் போன்ற சமூகம் மீண்டும் தோன்ற வேண்டுமென்று விரும்பினுல் ஆங்கிலக் கல்வி மூலமாக அதைத் தோற்றுவிக்க முடியாது.

"ஆங்கிலக் கல்வியில் நமக்கு ஏதோ ஒருவித மோகம் இருக்கிறது. அதனுல் ஏற்படும் நன்மை தீமைகளை ஆராய்ந்து பாருங்கள்."

—'மாணவருக்கு', பக். 25-6.

சிந்தனு சக்தி செத்துவிட்டது!

தாய் மொழியை ஒரு பாட மொழி என்ற அளவில் தாழ்த்தி விட்டு, உயர்தரக் கல்வி முழுவதையும் ஆங்கில மொழியிலே போதிக்கப்படும் கொடுமையை நினைக்கும்

போதெல்லாம் காந்தியடிகளின் சாந்திதவழும் உள்ளமும் எரிமலையாக மாறியது.

"தாய் மொழியிலன்றி அன்னிய மொழி மூலம் கல்வி கற்பதால் ஏற்படும் தீமைகள் பல. நம் பிள்ளைகளின் மூளை சோர்வுறுகிறது. அவர்கள் நரம்புகளின்மீது அளவுக்குமீறிய பாரம் சுமத்தப்படுகின்றது. அவர்கள் மனப் பாடம் செய்யும் கிளிப் பிள்ளைகள் ஆகிவிடுகின்றார்கள். சொந்தமாகச் சிந்திக்கவும் செயலாற்றவும் சக்தியற்றுப் போய் விடுகிறார்கள். கற்கும் கல்வியைத் தங்கள் குடும்பத்திலோ அல்லது பொது மக்களிடமோ பரப்ப அவர்களால் முடிவதில்லை. அந்நிய நாட்டு மொழியில் கல்வி கற்பதால் நம் பிள்ளைகள் சொந்த நாட்டிலேயே அன்னியராகி விடுகின்றனர். தற்காலக் கல்வி முறையினால் ஏற்பட்டுள்ள வருந்தத்தக்க விளைவு இதுவாகும்."

—'கல்வி' என்னும் நூலிலிருந்து.

இது, அடிகளாரின் இதயக் குமுறல். பரங்கி மொழி நம் நாட்டுக் கல்லூரிகளில் பயிற்சி மொழியாக இருக்கும் கொடுமையை அகற்ற இந்தியாவில் ஒரு சர்வாதிகாரி தோன்றுவதை அடிகள் வரவேற்பதோடு, அந்தச் சர்வாதிகாரியாக இருக்கவும் அவருடைய உள்ளம் துடிப்பதை எழுத்தோவியம் தீட்டிக் காட்டுகின்றார்.

"அன்னிய மொழி பயிற்சி மொழியாக இருப்பது நம் மொழிகளின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளது. எனக்கு ஒரு சர்வாதிகாரியின் அதிகாரம் இருக்குமென்றால், நான் இன்றே நம் சிறுவர்கள் அந்நிய மொழியின் மூலம் கல்வி

கற்பதை நிறுத்தி விடுவேன். எல்லா ஆசிரியர்களையும், விரிவுரையாளர்களையும் உடனே தாய் மொழிமூலம் கல்வி கற்பிக்கும்படியாகக் கட்டளையிடுவேன். இம்மாற்றத்தை எதிர்ப்பவர்களை வேலையிலிருந்து விலக்கி விடுவேன். பாடப் புத்தகங்கள் தயாராகும்வரை நான் காத்திருக்க மாட்டேன். பயிற்சி மொழி மாறிய பின் அவை தாமாகவே வந்துவிடும். அன்னிய மொழி மூலம் கல்வி கற்பிக்கும் இக்கேட்டினுக்கு உடனடியாகத் தீர்வு காணவேண்டும்.''

—'கல்வி'.

ஆங்கிலம் தேவையில்லை !

ஆங்கிலத்திலுள்ள இலக்கியச் செல்வங்களை, கலைகளை, அம்மொழியின் வாயிலாகவே பயிலவேண்டுமென்ற மூடத்தனத்தை காந்தியடிகள் முழு மூச்சோடு எதிர்த்தார். அவற்றையெல்லாம், நம்மிலே ஆங்கிலம் பயின்றவர்களைக் கொண்டு தாய் மொழியில் மொழி பெயர்த்து படிக்க வேண்டுமென்பதே அடிகள் கருத்து. இதோ, அவரே கூறுகின்ருர்:

''ஆங்கிலத்தையோ அல்லது அம் மொழியிலுள்ள சிறந்த இலக்கியத்தையோ நான் குறைத்துப் பேசுவதாக ஒருவரும் நினைக்கவேண்டாம். ஆங்கிலத்தின்பால் உள்ள அன்பிற்கு 'ஹரிஜன்' பத்திரிகையே தக்கசான்று. ஆனல், எவ்வாறு ஆங்கில நாட்டின் மிதமான சீதோஷ்ணத்தாலோ அல்லது இயற்கைக் காட்சியாலோ இந்திய நாட்டிற்குப் பயன் இல்லையோ, அதுபோல் அத்தேசத்தின் சிறந்த இலக்கியத்தாலும் நமக்குப் பயன் இல்லை. தட்ப வெப்பம், இயற்கைக் காட்சி,

இலக்கியம் ஆகிய மூன்று வகையாலும் இங்கிலாந்தைவிட இந்தியா தரம் குறைந்ததாகவே இருக்கலாம். ஆனால், நாம் நமது சூழ்நிலையில் தான் வளரமுடியும். நமது மரபின் அடிப்படையில் நாமும் நம் குழந்தைகளும் முன்னேற வேண்டும். இன்னொரு மரபைக் கடன்வாங்கினால் நமது மரபு வளராதுபோம். அன்னிய 'உணவை' உண்டு நாம் ஒருபோதும் வளர இயலாது. ஆங்கில மொழியிலுள்ள இலக்கியச் செல்வங்களை யெல்லாம் இந்திய மக்கள் தங்கள் தாய்மொழியின் வாயிலாகப் பெறவேண்டும் என்றே நான் விரும்புகின்றேன்.''

—'கல்வி'.

பயிற்சி மொழி தமிழாகத்தான் இருக்கவேண்டும் என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டு விட்ட தமிழக ஆட்சி, அதனை நடைமுறைக்குக் கொண்டு வருவதில் ஆமை வேகத்தில் செயல்பட்டு தாய் மொழிப் பற்றுளரின் பொறுமையைச் சோதிக்கின்றது. மத்திய ஆட்சியோ, நீதி மன்றங்கள் இந்தி மொழியில் நடைபெற வேண்டும் என்று 'கரடி' விடுகின்றது. காந்தியடிகளோ,

''உடனடியாகப் பயிற்சி மொழி மாற்றப்படல் வேண்டும். மாநில மொழிகளுக்கு உரிய இடம் கொடுக்கப்படல் வேண்டும். மாநில நீதி மன்றங்களிலெல்லாம் அந்தந்த மாநில மொழியே வழங்கப்படல் வேண்டும். அதனால், நம் மாநில மொழிகளின் மதிப்பும் முக்கியத்துவமும் அதிகமாகும். மாநிலச் சட்டசபைகளின் நடவடிக்கைகளும் மாநில மொழிகளிலேயே நடை பெறவேண்டும்''

—'கல்வி'.

தொகுத்துப் பார்ப்போம்!

இதுவரை நாம் எடுத்துக் காட்டிய சான்றுகளி லிருந்து ஆங்கில மொழியின் ஆதிக்கத்தை அகற்றி, அவரவர் தாய் மொழிக்கு வாழ்வளிப்பதில் காந்தியடி களின் கருத்துக்களை கீழ்வருமாறு தொகுக்கலாம்.

* ஆங்கில மொழிக் கல்வி முறை கடந்த ஒன்றரை நூற்றுண்டு காலத்தில், பாரத மக்களுக்கு நன்மை செய்ததே யில்லை.

* ஆங்கிலக் கல்வி முறையால் பாரத மக்களின் இயற்கை அறிவு அழிந்தது; வீரம் தொலைந்தது; சிந்தனை சக்தியே செத்து விட்டது!

* ஆங்கில மொழியில் உயர்தரக் கல்வி போதிக்கப் படும் கொடுமையை உடனடியாக அகற்றியாக வேண்டும். அவசியமானல், அதற்காக ஒரு சர்வாதிகாரி வருவதையும் வரவேற்கலாம்.

* ஆங்கிலத்தை ஒரு மொழியாகக் கற்கலாம். அதுவும், கல்லூரிக் கட்டத்தில்—அதற்குக் கீழே அல்ல.

* ஆங்கிலத்தின் இடத்தை அந்த அந்த மாநிலத் தின் மொழிகளுக்கே தரவேண்டும். குறிப்பாக, மருத்துவ—பொறியியல்—விஞ்ஞானப் பாடங்கள் தமிழகத்தில் தமிழ் மொழியிலேயே பயிலப்பட வேண்டும். ஆட்சி தமிழிலேயே நடைபெற வேண்டும். நீதி மன்றங்களின் நடவடிக்கைகள் தமிழில் நிகழவேண்டும்.

வரலாற்று வழியில் நாம்

தாய்மொழிப் பற்று காரணமாக ஆங்கில மொழியின் ஆதிக்கத்தை எதிர்க்கும் நாம், புதிய பாதையை அமைக்கிறோமில்லை. புரட்சி எதுவும் நிகழ்த்துகின்றோமில்லை. காந்தியடிகள் இந்திய அரசியலில் தலைமை தாங்கத் தொடங்கியபோதே, ஆங்கில ஆதிக்க எதிர்ப்புணர்ச்சி இந்திய விடுதலை இயக்கத்தின் ஒரு அங்கமாகிவிட்டது.

தாய்மொழிப் பற்று, சுதேசியமே !

சுதேசிக் கிளர்ச்சியிலே, ஆடை—அணிகலன்களில் மட்டுமின்றி, மொழித் துறையிலும் சுதேசி உணர்ச்சி வேண்டுமென்ற எண்ணம் இரண்டறக் கலந்துவிட்டது. ஆம்; இந்தியா விடுதலைபெறும் காலத்தில், தமிழ் மொழிக்கும் விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தினர் காந்தியடிகள். தாம் வகுத்த நிர்மாணத் திட்டங்களில், தாய் மொழி வளர்ச்சிக்குப் பாடுபடுவதையும் ஒரு அம்சமாக்கினர் உத்தமர் காந்தி.

அன்றுதொட்டு, காந்தியடிகளைப் பின்பற்றிய பெருந் தலைவர்களும், ஆங்கில ஆதிக்கத்தை அடியோடு அகற்ற

ஆர்வம் கொண்டனர். பரங்கி மொழிக்கு எதிராகப் போர்ப்பறை கொட்டினர். சரியாகச் சொன்னால், காந்தியடிகள் அரசியல் தலைமை ஏற்குமுன்பே தாய் மொழிப் பற்று தமிழகத்தில் தோன்றிவிட்டது. அரசியல் மேடையிலே ஆங்கிலம் ஆதிக்கம் கொண்டிருந்த காலத்தில், அதற்கு எதிராகத் தமிழிலே முழங்கிய பெருமை, வ. உ. சிதம்பரனார்—சுப்பிரமணிய சிவா ஆகியோருடையதாகும்.

> "ஒரு தேசத்திற்கு உயிர் அத்தேசத்தின் பாஷையாகும். சுயபாஷையைக் கைவிடுவோர் மூடத்தனமாகவோ அல்லது பைத்தியம் பிடித்தோ தற்கொலை செய்து கொள்கின்றவர்களாவார்கள். தற்கொலை செய்துகொள்ள எத்தனித்தல் அரசாங்கச் சட்டத்தின்படி குற்றமாகுமானால், தம்மையும் தன்னுடைய ஜன சமூகத்தையும் கொல்ல ஆரம்பித்து, தேச பாஷையை உதாசீனம் செய்பவர் ஆயிரம் மடங்கு அதிகக் குற்றங்களைப் புரிபவர் ஆவார். நமது ராஜாங்கச் சட்டங்கள் இந்தக் கொலை பாதகர்களை குற்றவாளிகளுடன் கூடச் சேர்க்காவிட்டாலும், எல்லா உலகங்களுக்கும் ராஜராஜேஸ்வரியாய் அரசாட்சி புரிந்து வரும் மகாசக்தி சிருஷ்டி நீதிகளின் பிரகாரம் இவர்கள் குற்றவாளிகளே யாவர்."

இது தியாகி சுப்பிரமணியசிவம் அவர்கள் தாம் ஆசிரியப் பொறுப்பேற்று நடத்திய "விவேக பானு" பத்திரிகையில் 1951ம் ஆண்டின் மே இதழில் எழுதப்பட்டதாகும்.

தாய்மொழித் துரோகம், கொலைக் குற்றம்!

ஆம்; தேசபக்தர் சிவம் கூறுகிறார், தாய் மொழியைப் புறக்கணித்து பறங்கி மொழியைக் காதலிப்போர்

"கொலைகாரர்கள்" என்று. சட்டத்தின் பார்வையிலே தாய்மொழித் துரோகம் தண்டனைக்குரிய குற்றம் இல்லை என்றாலும், சர்வலோக நாயகி பார்வையிலே அது குற்றம் தான் என்கிறார் சிவா. எவ்வளவு தெளிவான தீர்ப்பு! இந்தக் கருத்தை தியாகி சிவா வெளியிட்டது 1915ம் ஆண்டிலே! அதாவது, காந்தியடிகள் இந்திய அரசியலில் தலைமை ஏற்காத காலத்திலே!

வ. உ. சிதம்பரனார், வழக்கறிஞர் தொழில் நடத்தும் அளவிற்கு ஆங்கிலத்தில் புலமை பெற்றவர். ஆயினும், அவர் பறங்கி மொழிக்கு அடிமைப்பட்டவரன்று. அதன் ஆதிக்கத்தை எதிர்த்தவர். தம் வாழ்நாள் முழுவதும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.

இந்தியப் பெருந் தலைவர்களில் காந்தியடிகளுக்கு முன் தோன்றிய தலைவரான லோகமான்ய திலகர், தம் தாய் மொழியிலே எல்லையற்ற பற்றுடையவர். அம்மொழியிலே அழியா இலக்கியங்கள் பலவற்றை ஆக்கித்தந்தவர். ஆங்கில மொழியின் ஆதிக்கத்தைப் பாரதத்திலிருந்து அகற்ற வேண்டுமென்ற குறிக்கோளுடன் மொழிவாரி மாநிலக் கோரிக்கையை காங்கிரஸ் மகாசபையின் கொள்கையாக்கிய பெருமை திலகருடையதாகும். அவர் துவக்கி வைத்த இந்த அரும்பணியை, மிக்க திறமையோடும், தீர்க்க தரிசனம் வாய்ந்த திட்டத்தோடும் தொடர்ந்து நடத்தினார் காந்தியடிகள்.

சிலர் படித்தால் போதுமே!

லோகமான்ய திலகருக்குப் பிறகு, காந்தியடிகளேயன்றி, அவரைப் பின்பற்றிய பெருந்தலைவர்கள் அனைவருமே ஆங்கில மொழியின் ஆதிக்கத்தை வெறுத்தனர்; எதிர்த்தனர்.

"அந்தந்த மாநிலங்களில் கல்விக்காகவும் ஏனையவற்றுக்காகவும் மாநில மொழிகளே ஆட்சி மொழியாக இருக்கவேண்டும். அவற்றின் மூலமாகத்தான் பொது மக்களுக்கு கல்வியறிவையும் கலையறிவையும் விரைவில் தரமுடியும். ஆங்கில மொழி இந்தியாவின் பொது மொழியாக இருக்க வேண்டுமென்று சிலர் எண்ணுகிறார்கள். கை விரல்களால் எண்ணக்கூடிய சிறு கூட்டத்தார் அதைக் கற்றுக் கொள்ளலாம். ஆங்கிலம் இந்தியாவின் பொது மொழியாக இருக்கக்கூடும் என்ற கற்பனையே விநோதமானதாகும். பாமர மக்களின் கல்வி யறிவையும் கலை உணர்வையும் ஆதாரமாகக் கொண்ட பிரச்சினைக்கும் ஆங்கிலத்திற்கும் தொடர்பே கிடையாது. இன்றைக்கு இருப்பதுபோல உலகத் தொடர்புக்கு ஆங்கில மொழி அதிக அளவில் பயன்படுத்தப் பெறலாம். உலக நிகழ்ச்சிகளோடு உலகக் கருத்துக்களோடு தொடர்பு வைத்துக்கொள்ளும் பொருட்டு நம்மில் சிலர் அன்னிய மொழிகளைக் கற்றுக் கொள்வது இன்றியமையாததாகும். ஆங்கில மொழியைத் தவிர பிரஞ்சு, ஜெர்மன், ருஷ்யன், ஸ்பானிஷ், இத்தாலிய மொழிகளைக் கற்றுக் கொடுக்கும்படி நம் பல்கலைக் கழகங்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்பது என் விருப்பமாகும்.

"உலகத்தைப்பற்றிச் சரியான பார்வை நமக்கு இருக்கவேண்டுமானால், நாம் ஆங்கிலக் கண்ணாடிகளைக் கொண்டுமட்டும் பார்க்கக் கூடாது. ஏற்கெனவே இந்த ஒரு மொழியை மட்டும் கற்றுக்கொண்டு பிரிட்டிஷாரின் கருத்

துக்களையே நாம் ஏற்றுக்கொண்டதால் நாம் நம்முடைய மனப்பான்மையில் ஒரு பக்கமாகச் சரிந்து கொண்டே போய்விட்டோம்.

"இப்போது இந்தியா சம்பந்தமாக எல்லாவற்றையும் பிரிட்டிஷ் பார்வையைக் கொண்டு தான் பார்க்கிறார்கள் என்பதனை நமது தேசியவாதிகளில் தீவிரமானவர்கள்கூட உணர்வதில்லை.

"சர்வதேசக் கூட்டுறவுக்கும் வானொலியில் பேசுவதற்கும் ஆங்கில மொழி தக்க மொழியாக அமையலாம்.

"அதை நன்றாகக் கற்றுக்கொள்வது பயனுடையதாகும். ஆனால் இப்பொழுது நாம் செய்து வருவதுபோல அதிகமான நேரத்தைச் செலவிட்டு அந்த மொழியின் சிறப்புக்களைத் தெரிந்து கொள்ளவேண்டிய தேவை இல்லை என எனக்குத் தோன்றுகிறது. ஏதோ ஒரு சிலர் அவ்வாறு செய்தால் பாதகமில்லை. ஆனால் பெரும்பாலோர் அதை லட்சியமாகக் கொண்டு உழைப்பது தேவையற்ற சுமையைத் தூக்குவதாகும். வேறு வழியிலுள்ள அவர்கள் முன்னேற்றமும் தடைப்பட்டுப் போகும்."

இது, இன்று இந்தியாவின் பிரதமராக இருக்கும் ஜவஹர்லால் நேரு அவர்கள் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு தாமே எழுதி வெளியிட்ட தமது சுயசரிதையில் கூறுவதாகும். பிரதமர் நேரு மிகத் தெளிவாகக் கூறுகிறார். "ஆங்கிலம் இந்தியாவின் பொது மொழியாக இருக்கவே முடியாது" என்று. பொது மொழியாக இருக்கவே

முடியாது என்ருல், மாநிலத்தின் ஆட்சி மொழியாகவும் பயிற்சி மொழியாகவும் இருப்பதும் அநீதிதானே ?

ஆணி வேர் மாறவேண்டும்

ஆங்கிலம் பயிலவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் நேரு, "சிலர் மட்டுமே கற்ருல் போதும்" என்று கூறுவதையும் கருத்தில் கொள்ள வேண்டும். அன்னிய மொழிகளில் ஆங்கிலம் ஒன்றைமட்டுமே கற்பதால் ஏற்படும் கேட்டினையும் எடுத்துக்காட்டி எச்சரித்திருக்கிருர், காந்தியடிகளின் வாரிசாக வாழும் நேரு. பிரஞ்சு, ஜெர்மன், ருஷ்யன் போன்ற பிற மொழிகளையும் பாரத மக்கள் பயில வேண்டுமென்கிருர் பண்டித நேரு.

இதோ, பிரதமர் நேரு மேலும் பேசுகிருர் கேளுங்கள்:

> "ராஜ்யத்தின் நடவடிக்கைகள் அனைத்தும் ராஜ்ய மொழிகளின் வாயிலாகவே நடைபெற வேண்டும். எந்த அளவிற்கு பிரதேச மொழிகளைப் பயன்படுத்துவது ? ஆங்கிலத்திலிருந்து பிரதேச மொழிக்கு மாறுவதற்கான கால வரம்பு எது ?—என்பன பற்றி ராஜ்யங்களே தீர்மானித்துக்கொள்ள வேண்டும். அடிப்படையான கொள்கை மாறுதல் போதனு மொழியில்தான். தாய் மொழிதான் போதனு மொழியாக இருக்க முடியும். ஆங்கிலம் அந்தத் தகுதியை வகிக்கவே முடியாது.
>
> "ஆங்கிலத்திற்கு நீங்கள் எந்த இடத்தைக் கொடுப்பதாக இருந்தாலும், அது போதனு மொழியின் இடத்தைப்பெற முடியாது. போதனு மொழியாக பிரதேச மொழி வந்துகொண்டுதான் இருக்கிறது; வந்துவிட்டது; வந்தே தீரும்.

"ராஜ்யத்தைப் பொறுத்தவரை பிரதேச மொழியே பிரதான மொழி. 'பிரதான மொழி' என்று சொன்னால் போதாது; அதைவிட அழுத்தமான வார்த்தையில் சொன்னால்கூட பொருந்தும்.

"அந்தந்த ராஜ்யத்தில் அதனதன் மொழியே வளம் பெறும். அந்த வளர்ச்சியால் ஆங்கில மொழியே பாதிக்கப்படும்; இந்தி மொழியல்ல.

"தாய்மொழி வேண்டுமா? ஆங்கிலம் வேண்டுமா?' என்பதே பிரச்சினை. ஆங்கிலத்தின் இடத்தைத் தமிழ் எடுத்துக்கொள்ளும்.

"மொழிப் பிரச்சினை விஷயத்தில் உண்மையான—அடிப்படையான மாறுதல் ஆங்கிலத்திற்குப் பதில் தமிழ் போன்ற ஒரு ராஜ்ய மொழிக்கு மாறுவதால் அதுவே உண்மையான மாறுதல். போதனா மொழி மாறுவதன் மூலம் ஆங்கிலத்தின் ஆணி வேரே மாறிவிடுகிறது."

இது, 1958-ம் ஆண்டு நடைபெற்ற கௌஹாத்தி காங்கிரஸ் மகாசபையில் பிரதமர் நேரு வெளியிட்ட கருத்தாகும். ஆம்; காந்தியடிகள் மட்டுமல்லாமல், அவருடைய வாரீசாக வந்தவரும் ஆங்கில மொழி ஆதிக்கத்தை எதிர்க்கிறார். இந்த இருபெருந் தலைவர்களைப் பின் பற்றியே ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு இயக்கம் நடத்துகின்றது தமிழரசுக் கழகம்.

இதோ மற்றொரு பெருந் தலைவரான சர்தார் பட்டேல் பேசுகிறார் கேளுங்கள்:

"நாட்டிலுள்ள மக்களில் நூற்றுக்கு தொண்ணூற்று ஒன்பதுபேர் இங்கேயே தங்குகிறவர்கள்

என்பதையும் அவர்கள் அன்னிய மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. ஆதலால் நூற்றுக்கு ஒருவருக்கு அன்னிய மொழியைக் கற்றுக்கொள்வதற்கு வசதியைச் செய்து கொடுத்துவிட்டு, பாக்கி தொண்ணூற்று ஒன்பது பேருக்குத் தாய் மொழியில் கல்வி கற்க வசதி செய்துதர வேண்டும்."

இது, சர்தார் பட்டேல் அவர்கள் 30-11-51 ல் நாகபுரி பட்டமளிப்பு விழாவில் நிகழ்த்திய சொற்பொழிவாகும்.

மக்கள் விழித்தால் ஆதிக்கம் அழியும்!

பண்டித நேருவும் பட்டேலுமே யன்றி, தலைவர் ராஜாஜி உட்பட காந்தியடிகளின் சீடர்கள் எல்லோருமே கடந்த காலத்தில் ஆங்கிலமொழியின் ஆதிக்கத்தை எதிர்த்திருக்கின்றனர். அந்த வரலாற்றுப் பாதையில் நின்று கொண்டுதான் ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு இயக்கத்தை நடத்துகிறது தமிழரசுக் கழகம்.

ஜனாதிபதி பேசுகிறார்!

இந்தியக் குடியரசின் தலைவரான ராஜன்பாபு, காந்தியடிகளின் பிரதான சீடர்களில் ஒருவராவர். அவர், 1960 ஆகஸ்டு 15-ல் சென்னை கடற்கரைப் பொதுக் கூட்டத்தில் பேசியபோது கீழ்வருமாறு தமிழருக்கு அறிவுரை கூறினார்:

"ராஜ்ய மொழியையே பயிற்சி மொழியாகச் செய்ய வேண்டிய காலம் வந்துவிட்டது. பல்கலைக் கழகங்களில் உயர் வகுப்புகளில்கூட ராஜ்ய மொழியையே பயிற்சி மொழியாக ஏற்கும் காலம்

வெகு தொலைவில் இல்லை. கல்வித் துறையில் மட்டுமல்லாமல், நிர்வாகத் துறையிலும் ராஜ்ய மொழியே ஆட்சி மொழியாகப் பயன்படும் நேரமும் நெருங்கிவிட்டது:

"நீங்கள் விரும்பும் காலம்வரை ஆங்கிலம் நிலைத்திருக்கும். உங்கள்மீது எதையும் திணிக்க விரும்பவில்லை. இந்தி, இந்திய மொழியாக இருப்பினும், அதையும் உங்கள்மீது திணிக்க நாங்கள் விரும்பவில்லை. அதுபோல், அன்னிய மொழியை எங்கள் மீது திணிக்காதீர்கள். நாங்கள் உங்கள் உணர்ச்சிக்கு மதிப்புக் கொடுப்பதைப்போல, மற்றவர்களின் உணர்ச்சிக்கும் நீங்கள் மதிப்புக் கொடுக்க வேண்டும். உங்கள் மீது நாங்கள் இந்தியைத் திணிக்கவில்லையாதலால், நீங்கள் எங்கள்மீது ஆங்கிலத்தைத் திணிக்கவேண்டாம்.

"நீங்கள் வடஇந்தியாவில் சுற்றுப்பயணம் செய்யும்போது ஆங்கிலத்தில் பேசவேண்டாம். தாய் மொழியில் பேசுங்கள். நாங்கள் மொழி பெயர்ப்புக்கு ஆட்களை அமர்த்திக் கொள்கிறோம்."

நமது குடியரசுத் தலைவரின் குரலில், ஆங்கில ஆதிக்க எதிர்ப்புணர்ச்சி தெளிவாக ஒலிக்கக் கேட்கிறோம். அந்த ஒலியையே எதிரொலிக்கிறது தமிழரசுக் கழகம் நடத்தும் ஆங்கில ஆதிக்க எதிர்ப்புக் கிளர்ச்சி.

அண்ணலின் ஆவிக்கும் வேதனை!

ஒரு சுதந்தர நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டம், அதன் சொந்த மொழியில் அமைவதே அரசியல் நெறி. அந்த நெறிப்படி இந்தியாவின் அரசியல் அமைப்புச் சட்டம்

இந்தியிலும், மற்ற மாநில மொழிகளிலும் எழுதப்படு மென்றே, காந்தியடிகள் எதிர்பார்த்தார். தாம் நடத்திய ‘ஹரிஜன்’ பத்திரிகை 16–6–46 இதழில்,

> “நம்முடைய அரசியல் அமைப்பு ஆங்கிலத்தில் வகுக்கப் படவேண்டிய அவசியம் யாது? இந்திய மொழியிலேயே எழுதப்படவேண்டும். அந்த இந்திய மொழி கோடிக் கணக்கான மக்களுக்கு சாத்தியமாகும் இந்துஸ்தானியாகத்தான் இருக்கமுடியும். இப்பொழுதுள்ள நிலையில் அரசியல் நிர்ணய சபையார்க்கு ஆங்கில மொழி பெயர்ப்பு அவசியம்தான். அதேமாதிரி மாகாண மொழிகளிலும் மொழி பெயர்க்கவேண்டும்.”

என்று எழுதினர். ஆனால், அடிகளாரின் ஆவியும் வேதனைப்படும் வண்ணம் இந்தியாவின் அரசியல் சட்டம் ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டு நடைமுறையி லிருக்கிறது. தமிழகத்திற்கு தனி அரசியல் சட்டம் வரையப்பட வேண்டுவது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் அந்த அரசியல் சட்டம் தமிழில் எழுதப்பட வேண்டியது மாகும்.

சுதந்தர நாட்டின் அரசியல் சட்டம் சொந்த மொழியில் இல்லையென்றால், அதைவிட வெட்கக்கேடு வேறு உண்டா?

தேவைதானு?

ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு இயக்கம் தேவைதானு?— என்று கேட்கலாம். ஆம்; மிக மிகத் தேவை. இதனை தமிழ் மொழியின் சார்பில் மட்டுமல்லாமல், காந்திய நெறியின் சார்பிலும், இந்திய தேசிய ஒற்றுமையின் சார்பிலும் நடத்துகின்றேன். அதைவிட, சுதந்தர உணர்ச்சியின் பெயரால், சுதேசி ஆர்வத்தின் பெயரால் நடத்துகின்றேன்.

ஜனாதிபதி ஆங்கில ஆதிக்கத்தினை வெறுக்கிறார். ஆனால், அவருக்கு விசுவாசப் பிரமாணம் எடுத்து, கேரளத்தில் கவர்னர் பதவி வகிக்கும் திரு. வி. வி. கிரி, "ஆங்கில ஆதிக்கம் நீடிக்கவேண்டும்" என்கிறார்.

பிரதமர் நேரு 'ஆங்கில ஆதிக்கம் அகல வேண்டும்' என்கிறார். அவருக்கு விசுவாசப் பிரமாணம் எடுத்து தபால் இலாகா அமைச்சராக இருக்கும் டாக்டர் சுப்பராயன், ஆங்கிலத்திற்கு ஆதரவு காட்டி வெறிபிடித்துப் பிரசாரம் செய்கிறார்.

1965–ல் மத்திய ஆட்சியின் நிர்வாகம் ஆங்கில மொழியிடமிருந்து இந்தி மொழிக்கு மாறும் என்கிறது அரசியல் சட்டம். அதற்குப் பிரமாணம் எடுத்த எம். பி.க்களும், எம். எல். ஏ.க்களும், 'என்றென்றும் ஆங்கிலம்' எனக் கூக்குரலிடுகின்றனர்.

இதுவா, விசுவாசம் ?

இந்த விசுவாசத் துரோகத்தனத்துக்கு எதிராக ஆங்கில ஆதிக்க எதிர்ப்பியக்கம் தேவைப்படுகிறது.

இப்படி ஒரு இயக்கம் தோன்றுவதற்கு அவசியம் இன்றியே ஆங்கில மொழியின் ஆதிக்கத்தை அழிக்க மாநில–மத்திய அரசுகள் முன்வந்தால் மகிழ்ச்சியோடு நான் வரவேற்பேன். உண்மையில் தமிழக ஆட்சி ஆங்கில மொழியின் ஆதிக்கத்தை அகற்றித்தான் ஆக வேண்டுமென்பதைக் கொள்கையளவில் அங்கீகரித்து விட்டது. அதனைச் செயல்படுத்தவும் ஓரளவு முன் வந்திருக்கிறது. ஆனால், பறங்கி மொழிப் பக்தர் கூட்டம் ஆட்சியைப் பயமுறுத்துகிறது. அதனால், தீவிரமாகச் செயல்பட ஆட்சி துணியவில்லை. ஆங்கில எதிர்ப்பு உணர்ச்சி, பொதுமக்கள்

நடத்தும் மாபெரும் கிளர்ச்சியாக மாறினல் மட்டுமே, ஆங்கில மொழியின் ஆதிக்கம் அஸ்தமிக்கும்.

யார் பழித்தாலும் சரி, யார் பகைத்தாலும் சரி; அமரர் காந்திஜியின் அருள் தன்மை வாய்ந்த ஆசி ஆங்கில எதிர்ப்பு இயக்கத்திற்கு இருக்கிறது.

அந்த ஆசியின் துணைகொண்டு முன்னேறுவோமாக!

தமிழ் மக்களே!

※ தமிழகத்தில் எங்கும் எதிலும் என்றென்றும் தமிழ் மொழியே ஆதிக்கம் செலுத்தப் பாடு படுவோம்!

※ ஆங்கில மொழியின் ஆதிக்கத்தை அகற்றப் போர் புரிவோம்!

தமிழினமே, ஒன்றுபடு!